

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 27 சோபகிருது வருடம், ஆடி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை (28.07.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 09, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## வடக்கு, கிழக்கில் இன்று பூரண ஹர்த்தால்



02பக்கம்

# சர்வகட்சி சந்திப்பில் திருப்தியில்லை!

## சம்பந்தன் விசேட அறிவிப்பு



"முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் நாட்டின் நன்மை கருதி - நாட்டில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்துள்ளோம். அவர் என்ன முடிவை எடுப்பார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்"

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற சர்வகட்சி மாநாடு தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளின் தலைவர்கள் இந்த மாநாட்டுக்கு வந்திருந்தார்கள். தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பலரும் தத்தமது கருத்துகளைத் தெரிவித்தார்கள்.

பொதுவாக இந்தப் பேச்சில் முன்னேற்றம் எதனையும் நாம் அவதானிக்கவில்லை. அதில் முழு அளவில் திருப்தியில்லை. ஆனால், சமாதானமாக வழிநடத்தப்பட வேண்டிய விடயங்களில் பெரிய கருத்து வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

கருமங்களை முன்னெடுப்பதற்குக் குழுக்களை ஜனாதிபதி நியமிப்பார் என எண்ணுகின்றோம்.

எங்களைப் பொறுத்தவரைக்கும் முக்கிய விடயங்களை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம்.

- ★ புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்
- ★ தமிழ் மக்களின் அபிலாஷைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்
- ★ வடக்கு - கிழக்கில் சரித்திர ரீதியாகத் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்

போன்ற விடயங்களை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம்.

இந்தக் கருமங்கள் நிறைவேற முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் தங்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்றும் ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம்.

முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் இந்தக் கருமங்களை நாட்டின் நன்மை கருதி - நாட்டில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்துள்ளோம். அவர் என்ன முடிவை எடுப்பார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்" என்றார்.

## பெருந்தோட்ட மக்களின் உரிமை கோரிய பயணம்

### தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை இன்று ஆரம்பம்

'வேர்களை மீட்டு உரிமை வென்றிட – மாண்புமிகு மலையக மக்கள்' என்ற தொனிப்பொருளிலான தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையான நடைபயணம் இன்று (28) முதல் ஆரம்பமாகவுள்ளது. தலைமன்னாரில் இன்று ஆரம்பமாகும் இந்த நடைபயணம், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி மாத்தளையில் நிறைவு செய்யப்படவுள்ளது. 16 நாட்கள் தொடர்ச்சியாக இந்த நடைபயணம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொத்தமாக 262 கிலோமீற்றர் தூரம் வரையில் பயணிக்கவுள்ள இந்த நடைபயணம், மலையக மக்களின் 200 வருட பூர்த்தியை முன்னிட்டு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்படவுள்ளது.

தலைமன்னாரில் இன்று ஆரம்பித்து, நாளை (29) தலைமன்னாரிலிருந்து பேசாலை வரையிலும் 30ஆம் திகதி பேசாலை முதல் மன்னார் வரையிலும் 31ஆம் திகதி மன்னாரிலிருந்து முருங்கன் வரையிலும் முதலாம் திகதி முருங்கனிலிருந்து மடு வரையிலும்,... 02 பக்கம்

## பிரான்ஸ் ஜனாதிபதி இன்று வருகை



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் இன்று (28) இலங்கைக்கு உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது, இன்று மாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன் பிராந்திய மற்றும் உலகளாவிய சவால்கள் தொடர்பில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துவார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## மாணவர்களிடையே கைபேசி பாவனையில் தொடர் அதிகரிப்பு

### கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென யுனெஸ்கோ சுட்டிக்காட்டு




மாணவர்களிடையே கையடக்கத் தொலைபேசிப் பாவனை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் நாடுகள் கல்வித்துறையில் தொழில்நுட்ப கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்று கல்வி தொழில்நுட்பம் தொடர்பான யுனெஸ்கோவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரத்தியேகமான கல்விசார் நடவடிக்கைகள் தொலைவில் இருக்கும்போது மாணவர்களிடையே... 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



13 ஆவது திருத்தம் வேணுமா வேண்டாமா எண்டு தமிழ் எம்.பிக்களை பார்த்து கேட்டிருக்கிறார் ரணில் ஐயா... இன்னும் அதிலேயே ஒரு தெளிவில்லாமத் தான் இருக்கிறார் ரணில் ஐயா...

## ரூ.339 மில்லியன் மின் கட்டணத்தை செலுத்தாத தேசிய வைத்தியசாலை

### விநியோகம் துண்டிக்கப்படுமென மின்சார சபை சிவப்பு எச்சரிக்கை




மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய 339 மில்லியன் ரூபா நிலுவை மின்கட்டணத்தை செலுத்தாமையினால், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கான மின் விநியோகத்தை துண்டிக்கப்போவதாக அந்த சபை சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐந்து மாதங்களுக்கான மின்கட்டணத்தை இதுவரையில் மீள் செலுத்தாமையின் காரணமாக வைத்தியசாலையின் செயற்பாடுகள் நெருக்கடிக்குள்ளாவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்

## சூரிய மின்சக்தி திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு



### அதானி நிறுவனத்துடன் விரிவான பேச்சு

நாட்டில் சூரிய மின்சக்தி திட்டத்தை விரைவாக ஆரம்பிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ள அரசாங்கம், இந்த வேலைத்திட்டம் தொடர்பில் இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் விரிவான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. 02 பக்கம்

## முஸ்லிம் கவுன்ஸில் நிராகரிப்பதை சமூகத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும்

### முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டமூலம் தொடர்பில் உலமா சபை வேண்டுகோள்

02பக்கம்

### உஷ்



இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவின் கீழ் இருந்த உப்பு கூட்டுத்தாபனம், சீமெந்து கூட்டுத்தாபனம், பி.சி.சி. நிறுவனம் என்பவற்றை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளாராம் ஜனாதிபதி ரணில்.

விசேட வர்த்தமானி ஒன்றின்கீழ் இந்த விடயங்கள் ஜனாதிபதியின் கீழ் வந்துள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள அரச நிறுவனம் ஒன்றுக்கு சென்ற இராஜாங்க அமைச்சர் சாமர அங்குள்ள அதிகாரிகளிடம் கடுமையாக நடந்துகொண்டது குறித்து பலரும் ஜனாதிபதியிடம் முறையிட்டதால் இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

## தேர்தல் பிற்போடப்பட்டமை ஜனநாயக விரோதமானது

### சர்வகட்சி கூட்டம் குறித்தும் சந்தேகம் எழுப்புகிறது எதிர்க்கட்சி



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டவிரோதமாகவும் ஜனநாயக விரோதமாகவும் பிற்போடப்பட்டுள்ளது. மாகாண சபையை பழைய முறைமையில் நடத்த சாதாரண பெரும்பான்மை மட்டுமே தேவை. ஆகவே, நிதிப் பற்றாக்குறையை கருத்தில்கொண்டு மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டையும் ஒன்றாக நடத்தவேண்டும் என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, 13ஆவது திருத்தம் தொடர்பான பேச்சுகள் நேர்மையான... 02 பக்கம்

## புத்தகப் பைகள் காலணிகளின் விலை குறைப்பு



பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் பாதணிகளின் விலைகள் 10 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக அதன் உற்பத்தியாளர்கள் நிதி இராஜாங்க அமைச்சரிடம் நேற்று (27) அறிவித்துள்ளனர்.

நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர்கள் தமது தீர்மானத்தை அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். நிதி இராஜாங்க அமைச்சருக்கும் புத்தகப் பைகள், பாதணிகளின் உற்பத்தியாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்த விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## விமலிடமிருந்து 10 பரிந்துரைகள்



### உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் கையளிப்பு

02பக்கம்

## வி.ஐ.பி. நுழைவு அனுமதி சப்ரி எம்.பிக்கு இரத்து



நாட்டுக்குள் சட்டவிரோதமாக தங்கக் கட்டிகளைக் கொண்டுவந்ததாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு வழங்கப்பட்டிருந்த விமான நிலையத்தின் விசேட அதிதிகளின் நுழைவு பிரிவை (வி.ஐ.பி.) பயன்படுத்துவதற்கான அனுமதி சபாநாயகர்... 02 பக்கம்

## ஐந்து முஸ்லிம் அமைப்புகளின் தடை நீக்கம்

நூருல் ஹுதா உமர்

நாட்டில் ஐந்து முஸ்லிம் அமைப்புகளின் தடையை நீக்கி அரசாங்கத்தினால் நேற்று (27) விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அது தொடர்பில் 2223/3 என்ற வர்த்தமானியில் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் ஐக்கிய தவ்ஹீத் ஜமாஅத், சிலோன் தவ்ஹீத் ஜமாஅத், ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத், ஜமாஅத் அன்ஸாரி சுன்னதில் முஹம்மதிய்யா ஆகிய அமைப்புகளே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளன.

## சூரிய மின்சக்தி...

அதானி நிறுவனத்தின் பிரதிநிதிகளான தவல் ஷா மற்றும் மனோஜ் தேஷ்முக் ஆகியோருக்கும் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கும் இடையிலான நட்புறவு சந்திப்பொன்று நேற்று முன்தினம் (26) கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, அதானி நிறுவனம் இலங்கையில் முன்னெடுக்கவிருக்கும் பணிகள் மற்றும் நாட்டில் நிர்மாணிக்கப்படவுள்ள பாரிய சூரிய மின்சக்தி திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை சுற்றுலா வர்த்தக நாம தூதுவர் சனத் ஜயசூரியவும் இணைந்து கொண்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் நிலைபெறுதகு வலு அதிகாரசபை ஆகியவற்றுடன் இந்திய விஜயம் தொடர்பில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (27) விசேட கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளார்.

இதன்போது, மின்சக்தி மற்றும் வலுசக்தி துறைசார் அபிவிருத்திப் பணிகள், கையொப்பமிடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள், முன்னேற்ற ஆய்வுகள், இந்திய அரசாங்கம் மற்றும் தனியார் துறை முதலீட்டு வேலைத்திட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதன்போது, சூரிய மின்சக்தி திட்டம் குறித்தும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் ஜனாதிபதி...

இது, பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த விஜயமாக கருதப்படுகின்றது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் பப்புவா நியூ கினியா உள்ளிட்ட பசுபிக் பிராந்திய நாடுகளுக்கு ஐந்துநாள் விஜயம் மேற்கொண்டு நாடு திரும்பியிருந்த நிலையிலேயே, இவ்வாறு இலங்கைக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்றிருந்த புதிய உலக பொருளாதார உடன்படிக்கை தொடர்பான மாநாட்டின்போது ஜனாதிபதி ரணில் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் ஆகியோர் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வடக்கு, கிழக்கில்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இன்று (28) பூரண ஹர்த்தாலை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் ஏற்பாட்டில் இந்த ஹர்த்தால் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, இன்று, வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் பேரணி ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை சென்றடைவதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அதில் கலந்துகொள்வோருக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் அரசியல் கட்சிகளும் எவ்வித பேதமுமின்றி ஆதரவளிக்கவேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வர்த்தகர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் ஆதரவளிப்பதுடன் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள போராட்டத்திலும் பங்கேற்க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

இதேவேளை, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தில் நீதி கோரியும் சர்வதேசத்தின் கண்காணிப்பை வலியுறுத்தியும் இன்று (28) வடக்கு – கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு பூரண ஆதரவினை வழங்குவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இதுதொடர்பில் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் இதுகால வரையிலும் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் விவகாரங்கள் பூசி மெழுகப்பட்டு, காத்திரமான நடவடிக்கைகள் எதுவுமின்றி நீர்த்துப்போகச் செய்யப்பட்டமையே வரலாறு. இதேபோன்று மேற்படி கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் நடைபெறாது இருக்க வேண்டும் என்பதோடு, கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி உட்பட தமிழர் பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் உரிய வகையில் சர்வதேச கண்காணிப்புடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகளை வெளிக்கொணர வேண்டியது அவசியமானது என்று குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்துக்கும் பூரண ஹர்த்தாலுக்கும் முல்லைத்தீவில் முன்னெடுக்கப்படவுள்ள வடகிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அழைப்பில் அனைவரும் இணைந்து முன்னெடுக்கவுள்ள பாரிய போராட்டம் மற்றும் ஹர்த்தாலுக்கு முல்லைத்தீவு மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் பூரண ஆதரவு வழங்குவதோடு இன்று (28) போக்குவரத்து சேவைகள் எவையும் இடம்பெறாது என முல்லைத்தீவு மாவட்டதனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இன்று வடக்கு கிழக்கு பிரதேசங்கள் முடங்கும் என்றும் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களிடையே...

கற்றல் ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கின்றன. அதன்காரணமாக இணையவழியான கற்றல் உள்ளடக்கங்கள் ஒருபோதும் சூழலுக்கு ஏற்றதாக அமையாது. ஐரோப்பிய நாடுகள் மற்றும் வட அமெரிக்காவில் 90 சதவீதம் உயர்கல்வி செயற்பாடுகள் ஒன்லைனில் உள்ளடக்கப்பட்டுள்ளமை திறந்த கல்வி தொடர்பான ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

கொவிட் - 19 தொற்றுப் பரவல் இருந்த காலப்பகுதியில் ஏற்பட்ட கல்வி ஒன்லைன் மயமானதால், அரை பில்லியன் வரையிலான மாணவர்கள் கல்வியை கைவிடும் நிலை உருவானது. முக்கியமாக ஏழை மாணவர்கள் மற்றும் கிராமப் புறங்களிலுள்ள மக்களின் மத்தியில் இந்த நிலை ஏற்பட்டது எனலாம்.

இந்நிலையில், 2030ஆம் ஆண்டாகும்போது பாடசாலை கற்றல் செயற்பாடுகளை இணையத்துடன் இணைப்பதற்கு நாடுகள் முன்வந்துள்ளன. இதுதொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

தொழில்நுட்பத்தின் வேகமான மாற்றம் கல்வி முறைகளையும் மாற்றியமைத்து வருகின்றது. டிஜிட்டல் கல்வி அறிவுடன் கூடிய விமர்சன ரீதியான சிந்தனை அறிவை பெருக்கக்கூடிய முறை முக்கியமானதாகும். எம்மால் கணக்கெடுக்கப்பட்ட நாடுகளில் 54 சதவீதமானவை எதிர்காலத்துக்காக திறன் மேம்படுத்த விரும்பும் நாடுகளாக இருக்கின்றன. 51 நாடுகளில் 11 அரசாங்கங்களே செயற்கை நுண்ணறிவை உள்ளடக்கிய பாடத்திட்டத்தை கொண்டுள்ளன. இதற்கு மேலதிகமாக அடிப்படை கல்வியறிவு அவசியமற்றதாகும். ஏனெனில் டிஜிட்டல் பயன்பாட்டுக்கு வாசிப்புத் திறன் கொண்ட மாணவர்களே அவசியமாகவுள்ளனர். அவர்களே போலி மின்னஞ்சல்களினால் ஏமாற்றப்பட மாட்டார்கள்.

மேலும், ஆசிரியர்களுக்கும் தகுந்த பயிற்சிகளை வழங்க வேண்டியது அவசியமாகவுள்ளது. ஆனால், பாதி நாடுகளில் மாத்திரமே ஆசிரியர்களுக்கு தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டங்கள் குறைந்தது 5 சதவீதமாவது ரன்சம்வெயர் போன்று இணையவழி குற்றங்கள் தொடர்பில் முக்கியத்துவம் வழங்கவேண்டியது அவசியமாகும்.

தொழில்நுட்ப பயனாளிகளின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அவசியமாக இருக்கிறது. தற்போதைய அளவில் 16 சதவீதமான நாடுகள் மாத்திரமே கல்வித்துறையில் தரவு தனியுரிமை தொடர்பான சட்டங்களை அமுல்படுத்தி அதனூடாக உரிமைகளை உத்தரவாதமளிக்கின்றன. 163 கல்வி தொழில்நுட்ப தயாரிப்புகளில் 89 சதவீதம் குழந்தைகளை ஆய்வு செய்ய முடியும் என்பது பகுப்பாய்வுகளில் தெரியவந்துள்ளது. தொற்று நோய் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இணையவழி கல்வியின்போது 42 நாடுகளில் 39 அரசாங்கங்கள் சிறுவர்களின் உரிமைகளை ஆபத்தான முறையில் பயன்படுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெருந்தோட்ட...

03ஆம் திகதி மடு சந்தியிலிருந்து செட்டிக்குளம் வரையிலும் 04ஆம் திகதி செட்டிக்குளத்திலிருந்து மதவாச்சி வரையிலும் வவுனியா முதல் மதவாச்சி வரையிலும் நடைபயணம் இடம்பெறவுள்ளது.

மேலும், 06ஆம் திகதி மதவாச்சி முதல் மிஹிந்தலை வரையிலும் 07ஆம் திகதி மிஹிந்தலை முதல் திரப்பனை வரையும் 08ஆம் திகதி திரப்பனையிலிருந்து கெக்கிராவ வரையிலும் 09ஆம் திகதி கெக்கிராவயிலிருந்து தம்புள்ளை வரையிலும் 11ஆம் திகதி தம்புள்ளை முதல் நாலந்தா வரையிலும் 12ஆம் திகதி நாலந்தாவிலிருந்து மாத்தளை வரையிலும் பயணிக்கவுள்ளது.

## வி.ஐ.பி. நுழைவு அனுமதி...

மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய குழுவின் போது, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதுதொடர்பில் வினவியுள்ளனர்.

அதன்போது, விமான நிலையத்தின் விசேட அதிதிகளின் நுழைவு பிரிவை பயன்படுத்துவதற்கு அலி சப்ரி ரஹீம் எம்.பிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும், அலி சப்ரி எம்.பி. தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுங்கட்சி எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக சபாநாயகரிடம் கோரி வந்த நிலையில், ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்கள் அவரின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

இந்நிலையிலேயே, தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய அதிவிசேட அதிதிகளின் நுழைவு பிரிவைப் பயன்படுத்துவதற்கு தடைவிதித்துள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி கடந்த மே மாதம் 23ஆம் திகதி விமான நிலையத்தின் விசேட அதிதிகளின் நுழைவு பிரிவில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அதன் போது அவரின் பயணப் பையிலிருந்து 07 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க கட்டிகள் சுங்க அதிகாரிகளினால் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததுடன், அவருக்கு 75 இலட்சம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டிருந்தது.

## ரூ.339 மில்லியன்...

இது தொடர்பில், மின்சாரசபையின் அதிகாரிகளினால் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் செலுத்த வேண்டிய நிலுவை மின் கட்டணத்தை செலுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்காவிட்டால் அதனால் நோயாளர்களே கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்று வைத்தியசாலை நிர்வாகத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தற்போதுவரையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்காக பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் இருப்பதாகவும் அறியமுடிகிறது.

இதுதொடர்பில் மின்சார சபையினால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

நாடு பூராகவுமுள்ள வைத்தியசாலைகளில், சுகாதார அமைச்சுக்கு உரித்தானவற்றில் மாத்திரம் மின் கட்டணத்துக்காக 3000 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

த சொய்சா மகளிர் வைத்தியசாலை ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 52 இலட்சத்து 41 ஆயிரத்து 251 ரூபாவும் தேசிய பற்சிகிச்சை வைத்தியசாலை ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 23 இலட்சத்து 33 ஆயிரத்து 508 ரூபாவும் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதியிலிருந்து 98 இலட்சத்து 74 ஆயிரத்து 656 ரூபாவும் மின் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

இதேவேளை, தேசிய சிறுநீரக வைத்தியசாலை 11 இலட்சத்து 34 ஆயிரத்து 318 ரூபாவும் தேசிய கண் வைத்தியசாலை 46 இலட்சத்து 99 ஆயிரத்து 237 ரூபாவும் காசல் மகளிர் வைத்தியசாலை ஒரு கோடியே 17 இலட்சத்து 14 ஆயிரத்து 521 ரூபா மின் கட்டணமும் செலுத்த வேண்டியுள்ளது.

மேலும், தேசிய வைத்தியசாலை மாத்திரம் 12 கோடியே 18 இலட்சத்து 20 ஆயிரத்து 306 ரூபா மின் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. நோயாளர்களின் பாதுகாப்புக் கருதி தொடர்ச்சியான மின் விநியோகத்தை மேற்கொண்டு வருவதாகவும் இருந்தபோதும் தற்போது நிலவும் நிதி நெருக்கடியினால் தொடர்ந்து மின் விநியோகத்தை பெற்றுக்கொடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய வைத்தியசாலைக்கான நிலுவை கட்டணம் மாத்திரம் 12 கோடி ரூபாவை தாண்டியுள்ளதால் எதிர்காலத்தில் எங்களின் மின் விநியோகத்தை நிறுத்தவேண்டிய தேவை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் பிற்போடப்பட்டமை...

நோக்கத்துடனானவை என்றால் அரசாங்கம் முன்மொழிவை முன்வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சர்வகட்சி கூட்டம் நேர்மையான நோக்கத்தில் நல்லெண்ணத்தில் அழைக்கப்பட்டதா அல்லது குறுகிய கால அரசியல் இலாபங்களுக்காக அழைக்கப்பட்டதா அல்லது அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்காகக்கொண்டு அழைக்கப்பட்டதா என்ற கேள்வி எமக்குள்ளது.

நேற்று (நேற்று முன்தினம்) அவர் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி பேசினார். ஆனால், 1987இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒன்றாகும். இப்போது பாராளுமன்றத்தில் உள்ள தரப்புக்கு இது சார்ந்து ஆற்ற வேண்டிய பணிகள் இல்லை. இப்போது நிறைவேற்று அதிகாரமும் ஜனாதிபதியும் அமைச்சரவையும் அதனை நடைமுறைப்படுத்துவதே எஞ்சியுள்ள பணியாகும்.

13க்கு அப்பால், 13 பிளஸ்சை தருவதாகக் கூறிய மஹிந்த ராஜபக்ஷ அணியினர் தான் இன்று ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதால் இதனை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதிக்கு பிரச்சினை இருக்காது என நினைக்கிறேன்.

பதின்மூன்றாவது திருத்தம் அடிப்படையில் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து பிரதேச மக்களுக்கும் மாகாண சபை முறைமையின் ஊடாக தமது மாகாணத்தை நிர்வகிக்க வாய்ப்பாக வழங்கப்பட்டது.

ஜனாதிபதியின் முன்னைய நிர்வாகத்திலும் தற்போதைய நிர்வாகத்திலும் ஆறு வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று கேட்கின்றோம்.

பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில், புதிய எல்லை நிர்ணயம் தாமதமாகும் பட்சத்தில், பழைய விகிதாசார முறையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்த சாதாரண பெரும்பான்மைக்கு, சார்பாக ஆதரவளிக்க பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தெரிவுக் குழுவில் எமது விருப்பத்தை தெளிவாக தெரிவித்தோம்.

மாகாண சபையை பழைய முறைமையில் நடத்த சாதாரண பெரும்பான்மை மட்டுமே தேவை. பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில், அப்பிரச்சினையை சாதாரண பெரும்பான்மையுடன் தீர்த்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

அதிகாரத்தைப் பற்றி பேசுவது அவசியம் தான். ஆனால் முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று ஜனாதிபதியிடம் கூறுகின்றோம். இதற்கு நிதி வேண்டும் என்று பேசினார்கள். ஆனால், தற்போது ஜனாதிபதியே நாட்டில் பிரச்சினை இல்லை, நிலைமை சீராகி விட்டது, போதிய நிதி இருப்பதாகவும் வெளிநாட்டில் இருந்து பொருட்களை கொண்டு வருவதற்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதியே கூறுகிறார்.

அது மாத்திரமன்றி, உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்ட விரோதமாகவும் ஜனநாயக விரோதமாகவும் பிற்போடப்பட்டுள்ளது. நிதியை மீதப்படுத்துவதற்காக மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் இரண்டையும் ஒன்றாக நடத்துமாறு ஜனாதிபதியிடம் கூறுகின்றோம்.

மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்த நாம் தயார். ஜனாதிபதி அதிகாரத்தை பரவலாக்க முயற்சிக்கின்றாரா அல்லது அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு ஏனைய பிரதேசங்களில் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் சூழ்ச்சியா இந்த சர்வகட்சி மாநாடு என்ற கேள்வி எமக்கு உள்ளது.

ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்த அரசாங்கத்தின் 123 பேரையும் ஒரு நிலைப்பாட்டுக்கு கொண்டு வாருங்கள். மாகாண சபைகள் இல்லாமல் அதிகாரங்களை பரவலாக்க முடியாது. தேர்தலை நடத்துமாறு வடக்கிலுள்ள கட்சிகளும் நாங்களும் ஜனாதிபதியிடம் கேட்ட போது ஜனாதிபதி எழுந்து சென்றார்.

எனவே, தேர்தலை ஒத்திவைத்து வடக்கு கிழக்கு மக்களை ஏமாற்றி வாக்கெடுப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும். அரசியலமைப்புமூலம் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதை ஏன் அவரால் நடைமுறைப்படுத்த முடியாது? நிறைவேற்று அதிகாரத்துக்கு அதற்கான உரிமை உண்டு.

நேற்றைய கூட்டத்தில் எந்த நிகழ்ச்சி நிரலும் இருக்கவில்லை. ஊழல் எதிர்ப்புச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் போன்ற விடயங்கள் இருந்தன. இதை அவர் நேர்மையான நோக்கத்துடன் செய்கிறார் என்றால் அரசாங்கத்தின் முன்மொழிவை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## விமலிடமிருந்து...

உள்ளூராட்சி மன்றங்களை பிரதேச அபிவிருத்தி செயற்பாடுகளில் முறையாக ஒருங்கிணைப்பதற்காக அந்த சபைகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் மாகாண அபிவிருத்தி சபையொன்றை நிறுவுதல் உள்ளிட்ட 10 பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றை தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச நேற்று முன்தினம்(26) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள சட்டமியற்றும் அதிகாரத்தை கைவிடவோ அல்லது இரண்டாம் நிலை நிறுவனங்களுக்கு வழங்கவோ கூடாது. மாகாண அபிவிருத்தி சபைக்கு பாராளுமன்றத்தினால் சட்டப்பூர்வமாக பகிர்ந்தளிக்கப்படும் நிறைவேற்று அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தலைவரொருவர் மற்றும் ஒருங்கிணைப்பு அமைச்சர்களை நியமிக்க வேண்டும் என்பதுடன் ஒருங்கிணைப்பு அமைச்சரொருவர் மேலும் சில அமைச்சுகளின் பொறுப்புகளை வகிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

பிரதேச மற்றும் மாவட்ட செயலாளர்கள் மாகாண அபிவிருத்தி சபையின் திட்டம் மற்றும் வழிகாட்டலுக்கமைய செயற்பட வேண்டும்.

அரச நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்பதற்காக பிரதிநிதிகளினதும் அதிகாரிகளினதும் சமூக பொறுப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உள்ளூராட்சி மன்ற நிறுவன மட்டத்தில் மக்கள் சபையை நியமிக்க வேண்டும் என்பதுடன் மாகாண மட்டத்தில் மக்கள் சபை பிரதிநிதிகள் சபையை உருவாக்க வேண்டும்.

தேசியத்துவம், கருத்துரிமை, சமய அல்லது குலம், பிரதேச அடிப்படையில் எந்தவொரு பிரஜையொருவர் வேறுபடுத்தப்படக் கூடாது என்பதுடன் சமத்துவத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் உரிமைகள் ஆணைக்குழுவை உருவாக்குவதற்காக புதிய சட்டமூலத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

தற்போது, நடைமுறையிலிருக்கும் வறுமையை ஒழிக்கும் சட்டத்தை மேலும் பலப்படுத்த வேண்டும் என்றும் அதன் பின்னூட்டங்களை அறியப்படுத்துவதற்காக பாராளுமன்ற செயற்குழுவொன்றை நியமிக்க வேண்டும். குறிப்பாக, தொல்லியல் கட்டளைச் சட்டம், வனவிலங்கு சட்டம், வனப்பாதுகாப்பு சட்டம், மகாவலி அதிகார சபை சட்டம் மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் போன்ற பொருத்தமான சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் 1971ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 2,832 யோசனைக்கமைய இந்திய சமுத்திர வளைய அமைப்பின் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது முதல் மிகக் குறுகிய காலத்தில் ஒவ்வொரு மாகாணங்களுக்கும் காணிக்கொள்கை, பொலிஸ் கொள்கை, நிதிக்கொள்கை என்பவற்றை நிறைவேற்றுவதனூடாக முழு சமஷ்டி அரசாக செயற்படும் நிலைமை ஆரம்பித்துள்ளது. இந்த கொள்கை கிழக்கு மற்றும் வடக்குக்கு மாத்திரமின்றி தெற்கு மக்களுக்கும் கிடைத்துள்ளமையை தெளிவாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதற்கு நீங்கள் பொறுப்பானவராவார்.

தேசிய மற்றும் வெளிநாட்டு அடிப்படைவாத அதிகார சக்திகளின் நோக்கங்கள், கருத்து மற்றும் செயற்பாடுகளுக்கமைய சமஷ்டி அரசு சர்வதேச தலையீட்டினால் தனியான அரசாக மாறிவிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதனை தடுப்பதற்காக உங்களுக்கு எவ்வித அரசியலமைப்பு அதிகாரமும் இல்லை என்பதை மிகக் குறுகிய காலத்தில் நீங்கள் புரிந்துக் கொள்வீர்கள்.

அவ்வாறானவொரு நிலைமையில், தற்போதும் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கும் இனப் பிரச்சினைகளுக்கும் உள்ளாகியுள்ள 65 சதவீத வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் உங்களுக்கு விடுக்கும் சாபத்தை ஒருபோதும் தடுக்க முடியாது. மக்களின் பிரச்சினைகளுக்கு பிரதான காரணமான அரசியல் தலைவர்களுக்கு பொலிஸ் அதிகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதால், அந்த மக்கள் மேலும் நெருக்கடிக்குள்ளாவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## முஸ்லிம் கவுன்ஸில்...

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்ட திருத்தம் குறித்து தன்னுடைய நிலைப்பாட்டை முஸ்லிம் சிவில் அமைப்புகளுடன் ஒன்றுபட்டு நீதி அமைச்சுக்கு ஏற்கனவே வழங்கியிருக்கிறது. அந்த முன்மொழிவுகளில் முஸ்லிம் கவுன்ஸில் எதை நிராகரிக்கிறது என்பதை தெளிவாக சமூகத்துக்கு முன்வைக்க வேண்டும் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் உலமா சபையினால் நேற்று (27) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத் திருத்தம் சம்பந்தமான முன்மொழிவை வழங்கியதற்கு, பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துகளையும் குறித்த சட்டத்திருத்தத்தின் முன்மொழிவில் வரவேண்டிய திருத்தங்களையும் முன்வைத்தார்கள். அதில் 18 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களால் எவ்வாறு ஒரு முன்மொழிவு வழங்கப்பட்டதோ அதேபோன்று முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளும் பாராளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட முன்மொழிவைப் பார்த்து ஒருமித்த ஒரு கருத்துக்கு வரவேண்டும் என்ற முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளின் வேண்டுகோளுக்கிணங்க, கடந்த 11ஆம் திகதி முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடலொன்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டதோடு மேலதிகமான சில முன்மொழிவுகளும் சிவில் அமைப்புகளால் முன்வைக்கப்பட்டன. இதனடிப்படையில், சிவில் அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட அனைத்து முன்மொழிவுகளையும் உள்வாங்கி ஓர் ஆவணம் தயாரிக்கப்பட்டு அதில் கையொப்பமிடுவதற்காக அனைத்து சிவில் அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இதற்கு முன்பே முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்ட திருத்தம் குறித்து தன்னுடைய நிலைப்பாட்டை நீதி அமைச்சுக்கு வழங்கியிருக்கிறது. குறித்த ஆவணமானது முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகள் அனைத்தும் ஒன்றுபட்டு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

அந்த 20 முன்மொழிவுகளில் முஸ்லிம் கவுன்ஸில் எதை நிராகரிக்கிறது என்பதை தெளிவாக சமூகத்துக்கு முன்வைக்க வேண்டும்.

பெண்களை காதிகளாக நியமித்தல் மற்றும் வலியில்லாமல் திருமணம் முடித்தல் என்ற விடயம் சமூகத்துக்கு மத்தியில் காலாகாலமாக இழுபறி நிலையில் உள்ளது.

எனவே, ஓர் ஆண் காதியாகவும் ஆணுக்கு உதவியாக இரண்டு பெண்கள் ஜூரிகளாகவும் நியமிக்கப்படுவதோடு திருமணத்தில் வலியின் ஒப்பந்தத்துடன் சேர்த்து திருமணம் முடிக்கின்ற பெண்ணின் ஒப்பந்தத்தையும் கட்டாயப்படுத்தி மார்க்கத்துக்கு முரணில்லாத வகையிலும் காலாகாலமாக பாதுகாக்கப்பட்டு வருகின்ற இஸ்லாமிய கலாசாரத்துக்கு முரண்படாத வகையிலும் அழகானதொரு முன்மொழிவை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வழங்கியிருக்கிறது.

இந்த முன்மொழிவுகளில் எதனை நிராகரிக்கிறது என்பதை முஸ்லிம் கவுன்ஸிலிடத்தில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வேண்டுகிறது. அதேபோன்று முஸ்லிம் கவுன்ஸிலானது பல அமைப்புகளை ஒன்றுசேர்த்த அமைப்பாக தன்னை முன்வைத்தாலும் அதில் இருக்கக்கூடிய 20க்கும் மேற்பட்ட அமைப்புகள் இந்த சிவில் அமைப்புகளின் முன்மொழிவுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் மேற்சொன்ன 02 பரிந்துரைகளுக்கும் உடன்பட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுக்கு கடிதம் வழங்கியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் முஸ்லிம் கவுன்ஸிலில் உள்ள அத்தனை அமைப்புகளினதும் கருத்துகளை முஸ்லிம் கவுன்ஸில் உள்வாங்கியதா, எப்போது அந்த சந்திப்பு நடைபெற்றது, அதில் இவ்விடயம் குறித்து எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை, முஸ்லிம் கவுன்ஸிலின் நிராகரிப்பை அதிலுள்ள ஏனைய அமைப்புகள் ஏற்றுக்கொண்டதா என்பதையும் தெளிவுபடுத்துமாறு ஜம்இய்யத்துல் உலமா வேண்டிக்கொள்கிறது.

ஏனெனில், முஸ்லிம் கவுன்ஸிலில் உள்ள அதிகமான அமைப்புகள் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் முன்மொழிவுகளுக்கு சார்பாக கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செயற்கை கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் மீட்பு



கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் பிரிவு மற்றும் கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று புதன்கிழமை (26) 21 கோடி ரூபா பெறுமதியான தூள் செய்யப்பட்ட செயற்கை கஞ்சா மற்றும் செயற்கை போதைப் பொருட்களுடன் மூவரை சந்தேகத்தில் கைது செய்ததாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹொங்கொங்கிலிருந்து டுபாய் வழியாக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த விமானம் மூலம் இவை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இதன் பின்னர் இவற்றை எடுத்துச் செல்வதற்காக மூவர் வந்தபோது, குறித்த பொதிகள் அவர்களுக்கு முன்னால் திறக்கப்பட்டது. இதன்போது செயற்கை கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதுடன் குறித்த நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு பத்தரமுல்ல பிரதேசத்தில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட ரஷ்ய பிரஜை உட்பட மேலும் மூவரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

கொழும்பு மற்றும் ஏனைய நகர்ப்புறங்களில் நடைபெறும் விருந்துகளின்போது இந்த செயற்கை போதைப்பொருள் பயன்படுத்தப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சிங்கப்பூர் நிறுவனத்திடமிருந்து RAMIS கட்டமைப்பைப் பொறுப்பேற்க ஆராய்வு





உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முதன்மைத் திட்டம் தொடர்பில் வழி வகைகள் பற்றிய குழு கவனம் செலுத்தியது. நாட்டில் தற்பொழுது பயன்பாட்டில் உள்ள RAMIS மென்பொருள் கட்டமைப்பை சிங்கப்பூர் நிறுவனத்திடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பொறுப்பேற்பதற்கான ஏற்பாடுகள் குறித்து வழிவகைகள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க தலைமையில் அண்மையில் கூடிய வழிவகைகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது.

அண்மையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வழிவகைகள் பற்றிய குழு RAMIS அமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியிருந்தது. இது தொடர்பில் மேலும் கலந்துரையாடும் நோக்கில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

RAMIS அமைப்பு தொடர்பில் செயற்படும் சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய எதிர்வரும் ஜனவரி மாதத்துடன் குறித்த அமைப்பை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என்ற விடயம் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதற்குத் தேவையான மனித வளம் உள்ளிட்ட உள்ளக விடயங்கள் திணைக்களத்துக்குள் உருவாக்கப்படாமை இங்கு தெரியவந்ததுடன், இது தொடர்பில் அறிக்கையொன்றைக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு அதன் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் விடுத்தார். மேலும், RAMIS அமைப்பை ஏற்றுக்கொள்வது மற்றும் அதனை மேம்படுத்துவதற்கான கட்டமைக்கப்பட்ட முன்மொழிவை இந்த அறிக்கை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட RAMIS அமைப்பை இன்னமும் முழுமையாக செயற்படுத்தப்பட முடியாமல் இருப்பது தொடர்பில் குழு உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

அதேநேரம், 13 அரசாங்க நிறுவனங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த தகவல் கட்டமைப்புக் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட 13 நிறுவனங்களுடனும் பல சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டதுடன், இந்த நிறுவனங்கள் அனைத்தும் தங்கள் தகவல் அமைப்புகளில் தேசிய அடையாளஅட்டை எண்ணை பொதுவான குறியீடாக பயன்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

இவ்வாறு ஒருங்கிணைந்த அமைப்பொன்றை உருவாக்கும்போது தனித்துவமான அடையாளமொன்றின் ஊடாக இதனை அணுகுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது பொருத்தமானதாக இருக்கும் என குழு பரிந்துரைத்தது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான லசந்த அலகியவண்ண, சஷீந்திர ராஜபக்ஷ, அநுராத ஜயரத்ன, பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இஷாக் ரஹ்மான், வசந்தயாப்பா பண்டார மற்றும் சஞ்ஜீவ எதிரிமான்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கடற்படையினருக்கு காணி சுவீகரிப்பு முயற்சி: எதிர்ப்பால் 4ஆவது நாளாகவும் கைவிடப்பட்டது



வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசத்தில் செம்பியன்பற்று வடக்கு பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணிகளை இலங்கை கடற் படையினருக்கு நிரந்தரமாகவே சுவீகரிக்கும் நோக்குடன் தொடர்ந்து நான்காவது நாளாக நேற்று (27) காணி அளவீட்டு முயற்சி இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு பகுதியைச் சேர்ந்த தனியாருக்குச் சொந்தமான 15 பேர்ச் (ஒன்றரை பரப்பு) காணியை இலங்கை கடற்படையினருக்கு நிரந்தரமாக சுவீகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட இருந்த காணி அளவீட்டு பணி மக்கள் எதிர்ப்பால் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இதன்போது பிரதேச மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

# இலங்கை போதைப்பொருள் வர்த்தகர் உட்பட ஐவருக்கு குவைத்தில் தூக்குத்தண்டனை

இலங்கையை சேர்ந்த போதைப்பொருள் வர்த்தகர் உட்பட ஐவருக்கு குவைத் அரசாங்கம் தூக்குத் தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

இலங்கையை சேர்ந்த போதைப்பொருள் வர்த்தகர், 2015இல் மசூதியொன்றின் மீது இடம்பெற்ற தாக்குதலின் சூத்திரதாரி உட்பட ஐந்து பேருக்கு தூக்குத்தண்டனையை நிறைவேற்றியுள்ளதாக குவைத் அரசு தெரிவித்துள்ளது. குவைத்தின் மத்திய சிறைச்சாலையில் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** உடல், மனம் சோம்பிக் காணப்படும், அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**ரிஷபம்:** விவாகப் பேச்சுக்களால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும். கடல் தாண்டிய பயணத்தால் நன்மை உண்டு.

**மிதுனம்:** நீண்ட நாள் நோயிலிருந்து விடுதலை. சத்துருக்களால் தன இலாபங்கள் உண்டு.

**கடகம்:** தொழில் ரீதியான நட்டங்கள் ஏற்படும். குழந்தைகளால் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள். எதிர்பாராத விபத்துகள் ஏற்படலாம்.

**கன்னி:** உங்களுக்கான நகை. உடைகளை வாங்குவீர்கள், துணிவோடு நடைபோடுவீர்கள்.

**துலாம்:** கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள். மனத் தைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படும்.

**விருச்சிகம்:** மனத் தைரியத்துடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**தனுசு:** குடும்ப உறவுகளுடன் கவனமாக நடந்த கொள்ளுங்கள். தேவையற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**மகரம்:** உங்கள் காதலியுடன் உள்ளாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள். தொழில், வியாபார இலாபம் உண்டு.

**கும்பம்:** நீங்கள் எதிர்பார்த்த தொழில் அமையும். குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**மீனம்:** கடின உழைப்பால் உடல் அசதி, ஏதோ பயத்தினால் மனம் தடுமாறிக் கொண்டிருக்கும்.

**திதி :** தசமி பி.ப.2.51 வரை பின் ஏகாதசி (வளர்)

**நட்சத்திரம்:** அனுஷம் பி.இ.12.55 வரை பின் கேட்டை

**யோகம்:** மரண யோகம் முழுவதும்

**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்:** மு.ப. 6.01 – 7.01 மணிவரை

**ராகுகாலம்:** 10.31 – 12.01 மணிவரை

**எமகண்டம் :** 3.01 - 4.31 மணிவரை

**குளிகை:** 7.31 – 9.01 மணிவரை

**சந்திராஷ்டமம்:** மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிர்ஷ்டம்:** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்:** -----

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

# தமிழர் தாயகத்தின் இன்றைய பூரண முடக்கத்துக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் ஆதரவு

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்தில் நீதி கோரியும் சர்வதேசத்தின் கண்காணிப்பை வலியுறுத்தியும் இன்று (28.07.2023) வடக்கு – கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் பூரண ஆதரவினை வழங்குகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் இதுகால வரையிலும் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி விவகாரங்கள் பூசி மெழுகப்பட்டு, காத்திரமான நடவடிக்கைகள் எதுவுமின்றி நீர்த்துப்போகச் செய்யப்பட்டமையே வரலாறு. இதேபோன்று மேற்படி கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் நடைபெறாது இருக்க வேண்டும் என்பதோடு, கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி உட்பட தமிழர் பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் உரிய வகையில் சர்வதேச கண்காணிப்புடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகளை வெளிக்கொணர வேண்டியது அவசியமானது என்பதனை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்விவகாரத்தின் நியாயத்தன்மையினை புரிந்துகொண்டு, இதனை தமது தனிப்பட்ட சுயலாபங்களுக்கோ, அரசியல் தேவைகளுக்கோ பயன்படுத்தாது உண்மையான தீர்வினை வலியுறுத்தி சிங்கள முற்போக்கு சக்திகள் உட்பட்ட அனைத்து தமிழ்த் தரப்பினரும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்பதோடு அனைவரினதும் முழு ஆதரவினையும் வேண்டி நிற்கிறோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

## மருத்துவ சேவை அதிகாரிகளின் கைரேகை பதிவு கட்டாயமாகியது

மேலதிக கொடுப்பனவுகளைப் பெறும் சுகாதார அமைச்சின் மருத்துவ நிர்வாக சேவை அதிகாரிகள் உள்ளிட்ட நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் தமது நாளாந்த வருகை மற்றும் வெளியேறுகையை பதிவு செய்வதற்கு கைரேகை இயந்திரத்தை பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இது அமுல்படுத்தப்படும் என சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகள் உரிய முறையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

# 'பிரிப்பதற்கு இடங்கொடோம்' தொனிப்பொருளில் சோஷலிச அமைப்பினர் புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்




'சகோதரத்துவ நடைபயணத்தின் மீதான கொடூர தாக்குதலுக்கு எதிர்ப்பு' என்ற தொனிப்பொருளில் புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை சோஷலிச இளைஞர் அமைப்பினர் முன்னெடுத்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டமானது நேற்று வியாழக்கிழமை (27) முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டமானது புத்தளம் பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றதுடன், ஆர்ப்பாட்டத்தை சோஷலிச இளைஞர் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் அமைப்பினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



**உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தில் புதன்கிழமை (26) விநாயகர் ஊர்வலமும் வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்றன.** **படப்பிடிப்பு:** *உடப்பு நிருபர்*



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஜூலை 28ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# மருத்துவத் துறை நெருக்கடிக்கு அரசின் கவனமே அவசரத் தேவை

கொழும்பு தேசிய வைத்தியசாலை செலுத்த வேண்டிய 339 மில்லியன் ரூபா மின் கட்டணம் தொடர்பில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய 339 மில்லியன் ரூபா பணம் செலுத்தப்படாமையினால், மின்வெட்டுக்கான சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை சுமார் ஐந்து மாத காலமாக வழங்கப்படாததால்,வைத்தியசாலையின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

தேசிய வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடங்களில் தற்போது அதிகளவான நோயாளர்கள் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நிலையில் மின்வெட்டு ஏற்பட்டால் நோயாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்க நேரிடும். இதற்கிடையில் அரச மருத்துவமனைகளில் 10ற்கும் மேற்பட்ட சி.ரி. ஸ்கேனர்கள் பழுதடைந்துள்ளதால் நோயாளர் பராமரிப்புச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவு, பதுளை, திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, கராப்பிட்டிய, ஹொரணை, களுத்துறை, கொழும்பு தேசிய பல் வைத்தியசாலை, இரத்தினபுரி மற்றும் பேராதனை சிறிமாவோ சிறுவர் வைத்தியசாலை போன்றவற்றில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மாத்திரம் சுமார் ஒரு வருடமாக சி.ரி. ஸ்கேனர் செயற்படாமல் உள்ளது. நாடு முழுவதும் 44 சி.ரி. ஸ்கேன் இயந்திரங்கள் உள்ளன. அவற்றுள் 10 இயந்திரங்கள் செயலிழந்துள்ளதோடு 34 இயந்திரங்களே தற்போது இயங்கி வருகின்றன.

குறிப்பாக இரத்தினபுரி வைத்தியசாலையில் இந்த இயந்திரம் பழுதடைந்தமையினால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் அம்பியூலன்ஸ் சேவைகள் மூலம் சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுவதுடன், இவ்வாறான செயற்பாடுகளினால் சுகாதார அமைச்சு போக்குவரத்துக்காக அதிகப் பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இந்நிலையில் சி.ரி. ஸ்கேனர்களை திருத்தியமைப்பதன் மூலம் தேவையின்றி செலவாகும் பணத்தை சேமிக்கலாம்.

உடலில் இரத்தக்கசிவு ஏற்படுவதைக் கண்டறிவதற்கும் மூளை மற்றும் மண்டை ஓடு தொடர்பான நோய்களைக் கண்டறிவதற்கும் நுரையீரல் மற்றும் சிறுநீரகம் தொடர்பான நோய்களைக் கண்டறிவதற்கும் இரத்த நாளங்களில் அடைப்புகளைக் கண்டறிவதற்கும் கண் வெடிப்புகளின் 3டி மற்றும் 2டி படங்களைப் பெறுவதற்கும் பக்கவாத நோயாளிகளுக்கு 4 மணி நேரத்துக்குள் சிகிச்சை அளிக்கவும் சி.ரி. ஸ்கேன் பயன்படுகிறது.

ஒருபக்கம் தவறான மருந்துகள் , தடுப்பூசிகளால் உயிரிழப்பு. மறுபக்கம் வைத்தியர்களின் வெளியேற்றம், இன்னொருபக்கம் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடு என்ற காரணங்களால் அரச மருத்துவத்துறை அல்லாடி தள்ளாடி நிற்கின்றது. சுகாதார அமைச்சரோ மருந்துகளின் தராதரம் பற்றி தனக்கென்ன தெரியும் என்கிறார். அத்துடன் நிற்காமல், வைத்தியசாலைகளுக்கு செல்லும் எல்லோரும் மீண்டும் உயிருடன் வருவதில்லை என்பதால்தான் வைத்தியசாலைகளுக்கு முன்னால் மலர்ச்சாலைகள் இருப்பதாக அவர் வீம்பு பேசுகிறார்.

அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்துகளை பெறாமல், சிகிச்சைகளை எடுக்காமல் வெளிநாட்டு மருத்துவத்தை நம்பி இருக்கும் சுகாதார அமைச்சர் இப்படி பேசுவதில் வியப்பில்லை. என்றாலும் சாதாரண நாட்டு மக்களுக்கு மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள மேற்கண்ட நெருக்கடிகள் மிகவும் சுமையானவை.அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாதவை.

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காகவோ அல்லது மருந்துகளைப் பெறவோ எவரும் வருகிறார்கள் என்றால் பொருளாதார பிரச்சினைகளுக்கும் அப்பால் அங்கு தனியார் வைத்தியசாலைகளை விட மக்களுக்கான சேவை அரச சேவைக்குள் கிடைக்கலாம் என்ற நப்பாசையினால் தான்.

ஆனால் அவர்களின் தேவைகள் நிறைவேறி அவர்களுக்கான சேவைகள் முறையாக கிடைத்துள்ளனவா என்றால் அதுதான் இல்லை. எல்லாவற்றையும் தனியார் மயமாக்கும் அரசாங்கம் அரச வைத்திய துறையையும் தனியார் மயப்படுத்தினால் நல்லது என்று மக்கள் நினைப்பது இதனால் தான்.

மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள மேற்கண்ட நெருக்கடிகள் குறித்து கவனம் செலுத்தி இந்த பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வைக் காண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெள்ளம் வருமுன்னர் அணை கட்டி மனித உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் அரசாங்கம்.

# தீர்வு, அதிகாரப் பகிர்வு!





இலங்கையில் மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளுக்கு அரசியல் தீர்வை ஏற்படுத்த வகை செய்யும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியிருக்கிறார்.

நிகழாண்டு தொடக்கத்தில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தைக்குப் பின்னர் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வெளியிட்ட அறிக்கையில், சிறுபான்மை தமிழ்ச் சமூகத்துடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது அவசியம் எனக் குறிப்பிட்டிருந்தார். முன்னதாக, 2022இல் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக் கூட்டத்தின்போதும் 2021இல் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் கொழும்பு பயணத்தின்போதும் இதே கோரிக்கையை இந்தியா வலியுறுத்தியிருந்தது.

2021 டிசம்பரில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள், 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்துமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதி, அந்த விவகாரத்தில் தங்களது ஒருமித்த கருத்தைத் தெரிவித்திருந்தனர்.

இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையேயான இன மோதலுக்குத் தீர்வு காணும் முயற்சியாக 1987இல் இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் இடையே கையொப்பமான அமைதி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்திய- இலங்கை ஆட்சியாளர்களின் சந்திப்பின்போதெல்லாம் எழுப்பப்படும் இந்த 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு இப்போது வயது 36 ஆகிறது.

13ஆவது திருத்தச்சட்டம் மாகாண சபை நடைமுறையை உருவாக்க வகை செய்கிறது. இந்த முறைமையின் கீழ் சிங்கள பெரும்பான்மை பகுதிகள் உட்பட நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் அதிகாரப் பகிர்வு வழங்க திருத்தச்சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் நிலம், காவல் துறை, கல்வி, சுகாதாரம், வேளாண்மை, வீடு மற்றும் நிதித் துறை போன்றவற்றின் மீது ஒன்பது மாகாணங்களுக்கும் சுய நிர்வாக உரிமை கிடைக்கும்.

பிரித்தானியாவிடமிருந்து 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்தே வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அரசியல் தன்னாட்சி அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென தமிழர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், அதிகாரம் முழுவதும் இலங்கையின் மத்திய அரசிடம் குவிந்து கிடக்கும் நிலையில், மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை அளிக்க இலங்கை ஆட்சியாளர்கள் எவரும் முன்வரவில்லை.

பெரும்பான்மை சிங்களவர்களும் மக்கள் விடுதலை முன்னணி,தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உருமய போன்ற சிங்கள தேசியவாத கட்சிகளும் இந்த திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இலங்கையின் ஒற்றையாட்சி தன்மையை 13ஆவது திருத்தச்சட்டம் குலைத்துவிடும் என வாதிடும் இவர்கள், திருத்தச்சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றனர். மேலும், 1987ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை இலங்கை மீதான இந்திய அரசின் தலையீடாகவும் அவர்கள் பார்க்கின்றனர்.

1987இல் 13ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்குமான மோதல் மத்திய கட்டத்தில் இருந்தது. 2009இல் விடுதலைப்புலிகள் இயக்கம் முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

தனித் தமிழீழம் அமைக்கப்பட்டால் அது இலங்கையின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும், வளர்ச்சிக்கு தடையை ஏற்படுத்தும் என இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாகக் கூறி வந்தனர். ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கமும் இலட்சக்கணக்கான தமிழர்களும் போரில் அழிக்கப்பட்ட பின்னர் இலங்கையின் இப்போதைய நிலையைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை இராணுவம் வெற்றி பெற்றதற்காக சிங்கள பெரும்பான்மை மக்களால் கொண்டாடப்பட்ட ராஜபக்ஷ சகோதரர்கள், அதே சிங்கள மக்களால் அதிகாரத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டனர். அதற்குக் காரணம் ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடுகளால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, சீனாவின் கடன் வலையில் சிக்கி இன்று சர்வதேச நிதியத்தின் கடனுதவியை எதிர்பார்த்து இருக்கிறது இலங்கை.

ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கு இனச் சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு நீண்டகாலத் தீர்வை ஏற்படுத்துவது அவசியம். அதற்கு தமிழர் பகுதிகளுக்கு அதிகாரப் பகிர்வும் அவசியம் என இந்தியா தொடர்ச்சியாகக் கூறி வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிதான் இப்போதைய நெருக்கடியிலிருந்து இலங்கையைக் காப்பாற்றும்.

பிரதமர் மோடியுடனான சந்திப்புக்குப் பிறகு இலங்கைத் தமிழர்களுக்கான தேசிய நல்லிணக்கத் திட்டம் குறித்து ஆலோசிக்க பாராளுமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருப்பது ஆறுதல் அளிப்பதாகவுள்ளது. 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய பெரும் பொறுப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. அதை வலியுறுத்தி பெற்றுக் கொடுக்கும் கடமை இந்தியாவுக்கு உண்டு.

***நன்றி - தினமணி***

# அமானா தக்காஃபுல் இன்சூரன்ஸ் ISO 9001:2015 தரச் சான்றிதழ் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது

## அதன் அதி சிறந்த சேவைத் தரங்களுக்கான அர்ப்பணிப்புக்கு அங்கீகாரம்



இலங்கையில் மிக வேகமாக வளர்ந்து வரும் காப்புறுதி வழங்குநரான அமானா தக்காஃபுல் இன்சூரன்ஸ் (ATI) விரிவான சுயாதீன மதிப்பீடு மற்றும் தணிக்கையின் பின்னர் அதன் ISO 9001:2015 சான்றிதழை வெற்றிகரமாக மீண்டும் உறுதிப்படுத்தியதன் மூலம் சிறந்த தரமான சேவையை வழங்குவதற்கான தனது அர்ப்பணிப்பை மீண்டும் நிரூபித்துள்ளது. சர்வதேச தர நிர்ணய அமைப்பு (ISO) நிர்ணயித்த மிக உயர்ந்த தர முகாமைத்துவ தரத்தை பூர்த்தி செய்யும் நிறுவனங்களுக்கு இந்த நன்மதிப்புமிக்க சான்றிதழ் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ATI இன் பொது மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களின் செயற்பாடுகள் பற்றிய விரிவான மதிப்பீட்டைத் தொடர்ந்து, சுயாதீன Accreditation Auditors, Det Norske Veritas (DNV - GL, Norway) ஆனது நிறுவனத்தின் ISO 9001:2015 சான்றிதழை மீண்டும் உறுதிப்படுத்த முடிவுசெய்தது. இந்த மறுஉறுதிப்படுத்தல், ATI இன் எழுத்துறுதிச் செயல்முறைகளில், கொள்கைகளை திறம்பட வழங்குவதையும் அனுப்புவதையும் உறுதிசெய்து, உரிமைக்கோரல்களைத் தீர்ப்பதை விரைவுபடுத்துகிறது.

Amana Takaful General Insurance நிறுவனத்தின் தலைவர் ஜுல்பிகார் கவுஸ் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது பொது மற்றும் குடும்ப வணிகங்கள் இரண்டுக்கும் ISO தர சான்றிதழை மீண்டும் உறுதிப்படுத்தியதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். இந்தச் சாதனையானது, எமது செயற்பாட்டுச் சிறப்பைப் பேணுவதற்கும் எங்களது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உயர்தர சேவைகளை வழங்குவதற்கும் நாம் தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது. எமது ஒவ்வொரு தொடர்பாட்டின்போதும் எமது வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புகளையும் அதற்கு மேலான எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கு நாங்கள் முயற்சிப்பதால் ISO மூலம் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை நிலைநிறுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்."

ISO 9001:2015 தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட சாதனையாகும். இது, தர மேலாண்மை, திறமையான செயல்முறைகள் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி ஆகியவற்றில் Amana Takaful General Insurance நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த கடுமையான சர்வதேச நியமங்களுக்கு இணங்க, ATI ஆனது இலங்கையின் காப்புறுதித் துறையில் நம்பகமான நிறுவனமாகவும் வளர்ந்து வரும் முன்னோடியாகவும் தனது நிலையை மேலும் நிரூபிக்கும் வகையில், இணையற்ற சேவை மற்றும் வாடிக்கையாளர் அனுபவத்தை தொடர்ந்து வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

Amana Takaful Insurance ஆனது வாடிக்கையாளர்களை மையப்படுத்திய, சிறந்த நெறிமுறை நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதியின் (Takaful) தனித்துவமான கருத்தாக்கத்துக்கு முன்னோடியாக திகழ்கின்றது. இந்த நிறுவனம் 1999 இல் ஒரு பொது நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டதோடு, 2006 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது. Amana Takaful Insurance ஆனது இலங்கை முழுவதும் 35 இற்கும் அதிகமான கிளைகளைக் கொண்டுள்ளதன் மூலம் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய அதன் புவியியல் அடிச்சுவட்டை விரிவுபடுத்தியுள்ளது.

ISO 9001 அங்கீகாரம் பெற்ற அமைப்பான Amana Takaful Insurance நிறுவனமானது 2005 ஆம் ஆண்டு முதல் மாலைதீவில் வெளிநாட்டு பல இருப்புக்களைப் பராமரித்து வருகிறது. இந்த இருப்புக்கள் 2011 ஆம் ஆண்டு free-standing PLC ஆக மாலைதீவு பங்குச் சந்தையில் (MSE) பட்டியலிடப்பட்டது. Amana Takaful Insurance ஆனது முழுமையான பொது மற்றும் ஆயுள் காப்பீட்டுத் தீர்வுகள் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் ஒட்டுமொத்த சுகாதாரத் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட உடல்நலக் காப்பீட்டுக் கொள்கைகள் ஆகியவற்றை வழங்குகின்றது.

## இன்றைய நாளில்...

- 1948 – இலங்கை பாராளுமன்றத்தில் முதல் தடவையாக உறுப்பினர்கள் சிங்கள மொழியில் உரையாற்றினர்.
- 1976 – சீனாவில் டங்சான் நகரில் இடம்பெற்ற 8.2 அளவு நிலநடுக்கத்தில் 242,769 பேர் உயிரிழந்தனர், 164,851 பேர் காயமடைந்தனர்.
- 2001 – உலக நீச்சல் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் இயன் தோப் ஆறு தங்கப் பதக்கங்களைப் பெற்ற முதலாவது நீச்சல் வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.
- 2005 – ஐரியக் குடியரசுப் படை வட அயர்லாந்தில் தனது 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்தது.
- 2006 – ஈழப்போர்: வாகரையில் இலங்கைப் போர் விமானங்கள் தாக்கியதில் பலர் கொல்லப்பட்டனர்.
- 2017 – ஊழல் குற்றச்சாட்டில் பாகிஸ்தான் பிரதமர், நவாஸ் ஷெரீப்புக்கு உயர்நீதிமன்றத்தினால் வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது.



# உண்மையை கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் சிவில் அமைப்புகளை தெளிவுபடுத்த நடவடிக்கை

## இதனை ஸ்தாபிப்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்கிறார் அமைச்சர் அலி சப்ரி



உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிறுவுவதன் மூலம் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ள சகல பிரிவினருக்கும் உண்மையைக் கண்டறிய வாய்ப்புக் கிடைக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட வேண்டும் எனவும் அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மாத்திரமே அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்த அமைச்சர், சட்டம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் ஆணைக்குழுவிற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்காக சர்வதேச மட்டத்தில் பல விரிவுரைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் இடைக்கால செயலகம் அமைக்க ஏற்கனவே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும் இதனூடாக ஆணைக்குழுவின் பணிகளை விரைவில் தொடங்குவதற்கான அடித்தளத்தைத் தயார்ப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளைத் தெளிவுபடுத்துவதற்காக நேற்றுமுன்தினம் (26) ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போதே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக்கூறல் செயற்பாட்டின் அவசியத்தையும் அதனை ஸ்தாபிப்பதில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் விளக்கிய அமைச்சர், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் மேற்கொள்வதாகவும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, மூன்று தசாப்த கால யுத்தத்தினால் இன, மத வேறுபாடின்றி அனைவரும் பாரிய சேதங்களைச் சந்திக்க நேரிட்டது என்று தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை நாட்டிற்குள்ளும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் முன்வைத்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

"தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் பொறிமுறைகளை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான பொறிமுறையைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாவிட்டால் நாடு மீண்டும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும். எனவே, சமூகத்தைத் தெளிவுபடுத்தி இதனைச் செயற்படுத்துவதற்கான ஆதரவைப் பெறவேண்டும்" - என்றும் தெரிவித்தார்.

சுதந்திரம் பெற்று 20 வருடங்கள் நிறைவடையும் போது நல்லிணக்கத்தின் ஊடாக சிங்கப்பூர் அபிவிருத்தியடைந்த நாடாக மாறியுள்ளதாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அசங்க குணவன்ச தெரிவித்தார்.

இலங்கை தனது அபிவிருத்தி இலக்குகளை அடையவேண்டுமாயின் நல்லிணக்கம் மிக அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த ஆணைக்குழுவை நிறுவுவதன் மூலம் துரதிர்ஷ்டவசமான யுகம் மீண்டும் ஏற்படாத சூழலை உருவாக்க முடியும் என சுட்டிக்காட்டிய அசங்க குணவன்ச, உள்நாட்டில் வெற்றிகரமான மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பொறிமுறையை உருவாக்கத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காகவே இடைக்கால செயலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் சட்டம், கொள்கைப் பிரிவு மற்றும் மக்கள் தொடர்பாடல் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகள் உள்ளதாகவும் தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் உரையாற்றிய வண.தம்பர அமில தேரர், கடந்த தேர்தலில் மதவாதமும், இனவாதமும் பாரியளவில் தலைதூக்கியதால், அந்த அனுபவத்தை மக்கள் மறக்க முன் இந்த செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி தற்போது துணிச்சலான தீர்மானங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவ்வாறே மீண்டும் இவ்வாறான சம்பவம் இடம்பெறாதிருக்க தேவையான கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும் தம்பர அமில தேரர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

# சீன அட்டைப் பண்ணையை விதைப்பதற்கு யாழ்ப்பாணம் கிளிநொச்சி மக்களின் ஒற்றுமையை குழப்ப வேண்டாம்!

## யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா வேண்டுகோள்



மக்கள் பாரம்பரியமாக தொழில் செய்யும் கடற்பரப்பில் சீன கடல் அட்டைப் பண்ணையை விதைப்பதற்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மீனவ மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டாம் என முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த புதன்கிழமை பாசையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மண்டித்தலை கடற்பகுதியில் சிறகு வலைத் தொழிலில் ஈடுபட்ட பாசையூர் மற்றும் குருநகர் சிறகு வலை தொழிலாளர்களின் வலைகளை கிளிநொச்சி நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி பிடுங்கியுள்ளனர்.

150 வருட காலமாக பரம்பரை பரம்பரையாக சிறகுவலைத் தொழிலில் ஈடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் குறித்த அதிகாரிகள் செயற்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எமது பாரம்பரிய மீனவர்களின் கடற்பரப்புகளை தொழில் முறைகளில் இருந்து அகற்றி சீனாவுக்கு முழுக் கடலையும் தாரைவார்க்கப் போகிறீர்களா என்ற கேள்வி எழுகிறது.

ஏனெனில், பரம்பரை பரம்பரையாக சிறகுவலைத் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத்திணைக்கள உயரதிகாரி நேரடியாகச் சென்று சிறகு வலைகளைப் பிடுங்கியுள்ளார்.

இவ்வாறு பிடுங்கிய கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல்வள அதிகாரியிடம் பாசையூர் மற்றும் குருநகர் சிறகுவலைத் தொழிலாளர்கள் நேரடியாகச் சென்று கேட்டபோது, அதிகாரத் தொனியில், "நான் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்"- எனக் கூறுகிறார்.

சிறகுவலைத் தொழிலுக்கு அனுமதி எடுக்க வேண்டுமானால் குறித்த தொழிலாளர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கியிருக்க வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால் குறித்த பகுதி மீனவ சங்கங்களுக்கு அல்லது யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு அறிவித்திருக்க வேண்டும். குறித்த பகுதியில் முறையற்ற சிறகு வலைகள் இருப்பதால் அதை அகற்றுமாறு கூறியிருக்க வேண்டும்.

கால அவகாசம் வழங்காமல் தான் நினைத்தபடி மக்களின் வாழ்வாதாரத்தைக் கண்டுகொள்ளாமல் கிளிநொச்சி மாவட்ட நீரியல்வளத் திணைக்கள அதிகாரி செயற்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர் விரும்பினால் சீனாவுக்குச் செல்லலாம். ஆனால், எமது மக்கள் பாரம்பரியமாக செய்து வரும் சிறகுவலைத் தொழிலை எமது கடற்பரப்பிலேயே செய்ய வேண்டும்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மீனவ மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்துவரும் நிலையில், அவர்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தி சீன அட்டைப்பண்ணையை கடலில் விதைப்பதற்கான நடவடிக்கையை குறித்த அதிகாரி மேற்கொள்கிறாரா என்ற சந்தேகம் எழுகிறது.

தமிழ் அமைச்சர் இருக்கிறார், தமிழ் அதிகாரிகள் இருக்கிறார்கள். இருந்தும் ஏன் இந்த மக்களுக்கு சிறகுவலை தொடர்பில் விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கவில்லை.

அதனை விடுத்து அரசியல்வாதிகளின் எடுபிடியாக செயற்படும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் எமது வளமான எமது கடற்பரப்பை சீன அட்டைப் பண்ணைக்காக தாரை வார்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிடுங்கப்பட்ட பாசையூர் குருநகர் சிறகு வலை - தொழிலாளர்களின் வலைகளை மனிதாபிமான முறையில் அந்த மக்களிடம் திருப்பி வழங்குவதற்கு அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மீனவர்களை இணைத்து எமது மீனவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

# சியரா லியோனில் கடத்தப்பட்ட இலங்கையர்கள் மீட்கப்பட்டனர்

சியரா லியோனில் கடத்தல்காரர்களால் பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் 15 பேர் பொலிஸ் விசேட நடவடிக்கையின்போது மீட்கப்பட்டுள்ளனர்.

இன்ரபோல் ஊடாக கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இலங்கை ஆண்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

மனித கடத்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர் கடத்தலுக்கு எதிராக நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, உலகம் முழுவதும் 1,000 க்கும் மேற்பட்ட நபர்களை அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். ஆயிரக்கணக்கான பாதிக்கப்பட்டவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என இன்ரபோல் அறிவித்துள்ளது.

# தேசிய பூங்காக்களைப் பார்வையிட ஒன்லைன் அனுமதி நடைமுறை




சுற்றுலாப் பயணிகள் தேசிய பூங்காக்களுக்குள் தாமதமின்றி எளிதாகச் செல்ல வனவிலங்கு பாதுகாப்புத்துறை, ஒன்லைன் அனுமதி முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

கணினி மூலம் வழங்கப்படும் டிக்கெட்டுகள் பழுதடைந்து, காலதாமதம் ஏற்படுவதால், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தடுக்கும் வகையில் திணைக்களம் இந்த முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குச் செல்லத் திட்டமிடும் போது, ஒன்லைன் அனுமதி முறையின் மூலம் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு குழு நடத்துபவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதால், இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் இந்த நடைமுறையைப் பின்பற்ற அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பான தகவல்களை www.dwc.gov.lk என்ற இணையத்தளத்தில் பெறலாம்.

# தகாத உறவில் ஈடுபட்ட பௌத்த தேரரை தாக்கியவர்கள் பிணையில் செல்ல அனுமதி



நவகமுவ பிரதேசத்தில் பௌத்த பிக்கு ஒருவரும், இரண்டு பெண்களும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட 8 சந்தேகநபர்களும் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபர்களை கடுவெல நீதிவான் விசாரணைகளுக்காக முன்னிலைப்படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 8 பேரையும் தலா 100,000 ரூபா சரீரப் பிணையிலும் கடுமையான பிணை நிபந்தனைகளிலும் விடுவிக்குமாறு கடுவெல நீதவான் சனிமா விஜேபண்டார உத்தரவிட்டுள்ளார்.

நவகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையொன்றில் பிக்கு ஒருவரும் இரண்டு பெண்களும் ஒரே அறையில் இருந்த நிலையில் பிரதேச மக்களால் தாக்கப்படும் காணொளியொன்று தற்போது சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட பெண்களை கடுமையாகத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 8 பேருக்கும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்



நாவிதன்வெளி செய்தியாளர்

கல்முனை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை(27) நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, கணக்காளர் கே.எம்.எஸ்.அமீர் அலி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவ் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அரசாங்கத்தின் அஸ்வெசும தேசிய திட்டத்தில் கல்முனை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள குறைபாடுகள் மற்றும் தற்போதைய நிலை சம்பந்தமாக கலந்தாலோசித்து முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் கல்முனை கடற்படையின் தளத்துக்கான மேலதிக காணி விடுவிப்பு செய்தல், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கோரிக்கைகள் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய குறைபாடுகள் போன்ற பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டன.

# விலை குறைந்த முட்டைகள் எங்கே கிடைக்கும் ? சந்தையில் தட்டுப்பாடு குறித்து மக்கள் விசனம்

முட்டை பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் சதொச மற்றும் சிறப்பு சந்தைகளில் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது . எனினும், விலைகொடுத்து முட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கு சதொச மற்றும் சிறப்பு சந்தைகளில் முட்டைகள் இல்லை என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

மேலும் சாதாரண சந்தைகளில் 65 ரூபாவிற்கு முட்டைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் குறிப்பிடுகின்றனர். நாட்டில் முட்டையின் விலை அதிகரிப்பு மற்றும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து சிறப்பு சந்தைகள் மற்றும் சதொச நிறுவனங்களின் வாயிலாக விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய நேற்று முதல் 35 ரூபா முதல் 40 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. எனினும், நேற்று முற்பகல் முதல் மேல் மாகாணத்திலுள்ள சதொச மற்றும் சிறப்பு சந்தைகளில் முட்டைகள் விற்பனைக்கென இருப்பதாகக் காணப்படவில்லை. தற்பொழுது சந்தையில் முட்டையானது 65 ரூபாவிற்கே விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வயோதிபத் தம்பதியினர் காலியில் படுகொலை

காலியில் வயோதிபத் தம்பதியினர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி - ஹிக்கடுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (26.07.2023) இடம்பெற்றுள்ளது.இவர்கள் இருவரும் வீட்டில் இருந்த வேளை கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

72 வயதுடைய கணவனும், 68 வயதுடைய மனைவியும் வீட்டிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் வீட்டுக்கு அயல்வீட்டுக்காரர் ஒருவர் சென்றுள்ளார்.அப்போது அவர்கள் இருவரும் இரத்த வெள்ளத்தில் சடலங்களாகக் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார், இருவரின் சடலங்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த வயோதிபத் தம்பதியினரின் வீட்டுக்கு மாலை 4 மணியளவில் முச்சக்கர வண்டியொன்றில் இனந்தெரியாத நபர்கள் சென்றிருந்தனர் என்று அயல்வீட்டுக்காரர்கள் இருவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

கொலையாளிகளைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (27.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 218.3022 | 229.8686 |
| கனேடியன் டொலர் | 243.5558 | 256.1415 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.4800 | 47.6441 |
| யூரோ | 357.1091 | 374.1763 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.8560 | 255.0465 |
| ஸ்ரேலிங் பவுன் | 417.9072 | 436.2509 |
| சுவிஸ் பிராங்க் | 372.5321 | 393.1360 |
| ஐ.அ. டொலர் | 322.8497 | 335.8919 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 873.7131 |
| குவைட் | குவைட் தினார் | 1073.3221 |
| ஓமான் | ஓமான் றியால் | 855.5242 |
| கட்டார் | கட்டார் றியால் | 90.3999 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 87.8209 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 89.6788 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.07.26
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5187 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,041,504.00
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 9 8 1 5 5 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3429 — சீட்டிழுப்பு திகதி 2023.07.26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 70,558,049.60
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 21 50 73 79 — விசேட எழுத்து A
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46831

Lucky 7 லக்கி — திகதி 26.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0013
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 4 8 8 2 7 3
L7 இலக்கம் 3 9
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,144,071.44

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1217 — திகதி 2023-07-26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,786,723.20
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 10 45 54 72 — விசேட எழுத்து K

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 496 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,866,987.00
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 11 40 53 58 — விசேட இலக்கினம் மேஷம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1535 — 54278 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,356,084.00
ஆங்கில எழுத்து G — சுப்பர் இலக்கம் 15 — வெற்றி இலக்கங்கள் 44 45 49 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# உலக செய்திகள்

# நைஜர் நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியது இராணுவம்!

## ஜனாதிபதி சிறைப்பிடிப்பு



மேற்கு ஆபிரிக்க நாடான நைஜரில் திடீரென இராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றி, ஜனாதிபதி மொஹம்மட் பாசுமை சிறைப்பிடித்தனர்.

நைஜர் ஜனாதிபதி மொஹம்மட் பாசும் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டார் என மேற்கு ஆபிரிக்க நாட்டின் தேசிய தொலைக்காட்சியில் புதன்கிழமை பிற்பகுதியில் தோன்றிய வீரர்கள் குழு கூறியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நைஜரில் உள்ள அனைத்து நிறுவனங்களும் நிறுத்தப்பட்டுள்ளன என இராணுவ வீரர்கள் தேசிய தொலைக்காட்சியில் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு ஆதரவாக தலைநகர் நியாமியில் திரளான மக்கள் வீதிகளில் இறங்கினர். ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சியின் பின்னணியில் இருந்த வீரர்கள் எதிர்ப்பைச் சமாளிக்க துப்பாக்கிச் சூடு நடத்தினர்.ஆனாலும் நகரம் பெரும்பாலும் அமைதியாகவே இருந்தது.

ஆபிரிக்க ஒன்றியம், ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இச்செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

# அரிசி ஏற்றுமதி தடையை நீக்குமாறு இந்தியாவுக்கு ஐ.எம்.எவ். வேண்டுகோள்

பாஸ்மதி அல்லாத அரிசி ரகங்களை ஏற்றுமதி செய்வதற்கு விதித்துள்ள தடையை நீக்குமாறு இந்தியாவுக்கு சர்வதேச நாணய நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உள்நாட்டில் சீரான அரிசி விநியோகத்தை உறுதி செய்யவும், அதன் விலையைக் கட்டுக்குள் வைக்கவும் பாஸ்மதி அல்லாத அரிசி ரகங்களை ஏற்றுமதி செய்வதற்கு இந்திய மத்திய அரசு கடந்த 20ஆம் திகதி தடை விதித்தது. இந்தியா ஏற்றுமதி செய்யும் மொத்த அரிசி அளவில் பாஸ்மதி அல்லாத ரகங்கள் சுமார் 25 சதவீதம் ஆகும்.

இந்திய அரசின் இந்த முடிவு சர்வதேச அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது. முக்கியமாக, ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக உணவுப் பொருட்கள் விநியோக சங்கிலி ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அரசி ஏற்றுமதி தடையானது பல்வேறு நாடுகளில் பணவீக்கத்தை அதிகரிக்கும் எனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஐ.எம்.எவ். தலைமை பொருளாதார நிபுணர் பியரி ஒலிவியர் கோரின்சாஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், ''இதுபோன்ற ஏற்றுமதி தடை உத்தரவுகள், சர்வதேச அளவில் உணவு தானியங்களின் விலையை மேலும் அதிகரிக்கும். மற்ற நாடுகளும் பதிலுக்கு ஏற்றுமதி தடை விதிக்கவும் வாய்ப்புள்ளது. சர்வதேச அளவில் அது பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் இதுபோன்ற தடைகளை ரத்துச் செய்ய ஐ.எம்.எவ். வேண்டுகோள் விடுக்கும்' என்றார்.

இந்தியாவின் இந்த முடிவு, உள்நாட்டில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த உதவும் எனத் தெரிவித்துள்ள ஐ.எ.ம்எவ். ஆராய்ச்சித் துறை உறுப்பினர் டேனியல் லே, அந்த முடிவால் சர்வதேச அளவில் பணவீக்கம் அதிகரிக்கும் என்றார். அரிசி ஏற்றுமதிக்கான தடையை இந்தியா படிப்படியாக ரத்துச்செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா, தாய்லாந்து, இத்தாலி, ஸ்பெயின், இலங்கை ஆகிய நாடுகளுக்கு இந்தியா அதிக அளவில் அரிசியை ஏற்றுமதி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# "காட்டுத் தீயால் எங்கள் நாட்டில் போர்ச் சூழல்"

## கிரீஸ் பிரதமர் வேதனை

தீப்பிழம்புகளுடன் நாடு போர்ச் சூழலில் இருப்பதாக கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

கிரீஸில் கடந்த சில நாட்களாகவே காட்டுத் தீ தீவிரம் காட்டி வருகிறது. நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதால் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கிரீஸ் சென்றுள்ள சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரித்துள்ளன.

இதுகுறித்து கிரீஸ் அரச தரப்பில், "காட்டுத் தீ மிகவும் ஆபத்தானது; தீர்மானிக்க முடியாதது. காட்டுத் தீயால் பாதிக்கப்படக்கூடிய பகுதிக்கு நீங்கள் பயணிக்கவேண்டியிருந்தால் பயணம் செய்வதற்கு முன் உங்கள் பயண முகாமையாளரைத் தொடர்புகொண்டு நீங்கள் செல்லும் பகுதி காட்டுத் தீயினால் பாதிக்கப்படவில்லையா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிரீஸின் கிரீட் நகரம் காட்டுத் தீயினால் தீவிர பாதிப்புக்குள்ளாகும் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், கிரீஸின் ரோட்ஸ் நகரம் காட்டுத் தீயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் சுமார் 30,000 க்கும் அதிகமான மக்கள் தங்கள் குடியிருப்புகளிலிருந்து வெளியேறி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தீயை அணைக்கும் பணியில் இதுவரை இரு விமானிகள் உயிரிழந்துள்ளனர். தீப்பிழம்புகளுடன் நாடு போர்ச் சூழலில் உள்ளதாகவும், தீயை அணைப்பதில் அரசு முழுக் கவனமெடுத்து வருவதாகவும் கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் தெரிவித்துள்ளார். காட்டுத் தீயின் தீவிரம் இன்று வெள்ளிக்கிழமை முதல் குறையும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தர்மன் பிரசாரத்தை ஆரம்பித்தார்



சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முன்னாள் துணை பிரதமர் தர்மன் சண்முகரத்னம் (66) தன் அதிகாரபூர்வ தேர்தல் பிரசாரத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தார்.

தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூர் ஜனாதிபதியாகப் பதவி வகித்து வரும் ஹலிமா யாகோபின் ஆறு ஆண்டு பதவிக்காலம் செப்டெம்பர் 13 இல் முடிவுக்கு வருகிறது. இதைத் தொடர்ந்து, செப்டெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடக்கிறது.

இதில் போட்டியிடப்போவதாக அந்நாட்டைச் சேர்ந்த தொழிலதிபர் ஜோர்ஜ் கோ, முதலீட்டு மேலாளர் கோக் சாங், முன்னாள் அமைச்சரும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான தர்மன் சண்முகரத்னம் ஆகியோர் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

இதில் தர்மன் சண்முகரத்னம் தன் தேர்தல் பிரசாரத்தை நேற்று துவக்கினார். மனைவி ஜேன் யுமிகோ இடோகியுடன் இணைந்து பிரசாரத்தில் ஈடுபட்டார்.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் அரசியலில் இருந்து வரும் தர்மன் சண்முகரத்னம், பொருளாதார நிபுணராகவும், சிங்கப்பூர் அரச துறையிலும் பணியாற்றியுள்ளார். குறிப்பாக, சிங்கப்பூர் நிதி ஆணையத்தில் பணியாற்றினார்.

அவர் அரசியலுக்கு வந்தபின் கல்வி மற்றும் நிதித்துறை அமைச்சராகவும் 2011 - 19 வரை சிங்கப்பூர் துணைப் பிரதமராகவும் பதவி வகித்துள்ளார். மேலும், சர்வதேச நிதியம், உலக பொருளாதார மன்றம், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் பிரதான பதவிகளை வகித்துள்ளார்.

கடந்த 22 ஆண்டுகளாக அரசியலில் இருந்தவர், தீவிர அரசியலிலிருந்து விலகுவதாக கடந்த மாதம் அறிவித்தார்.

# வெளிநாட்டவர்களுக்கு அதிக சம்பளம் வழங்கும் சவூதி அரேபியா



ரியாத்: உலகிலேயே வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு அதிக சம்பளம் வழங்குவதில் சவூதி அரேபியா முன்னிலையில் இருப்பதாக இ.சி.ஏ.இண்டர்நேஷனல் கன்சல்டன்ஸி நடத்திய சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்று நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் நம்மில் பலரிடம் உள்ளது. பெரும்பாலும் அதிக சம்பளம் வழங்கும் நாடுகளுக்குச் செல்லவே போட்டி அதிகமாக உள்ளது. அதிக சம்பளம் என்று ஆசைப்பட்டு தவறான ஏஜென்சிகள் மூலம் பலர் வெளிநாடு சென்று ஏமாந்துவிடும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், சவூதி அரேபியா வெளிநாடுகளிலிருந்து வரும் பணியாளர்களுக்கு அதிக சம்பளம் தருவது இ.சி.ஏ. மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சவூதி அரேபியாவில் நடுத்தர அளவில் மேலாளர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக 83,763 பவுண்டுகள் சம்பளமாக வழங்கப்படுகின்றன. இலங்கை மதிப்பில் இது அண்ணளவாக ரூ.இரண்டரை ஆகும். உலகிலேயே இப்பணிக்கு வழங்கப்படும் அதிகபட்ச சம்பளம் இதுவாகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சராசரி சம்பளம் மூன்று சதவீதம் குறைந்திருந்தாலும் உலகளவில் இதுவே அதிகபட்சம்.

அதேசமயம், மிகுந்த செலவினங்கள் நிறைந்த நகரமாக பிரிட்டன் உள்ளது. குறிப்பாக, பிரிட்டனுக்கும் ஜப்பானுக்குமிடையே வெளிநாட்டினருக்கான ஊதிய இடைவெளி அதிகரித்துள்ளது.

தரவுகளின் அடிப்படையில் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு அதிக சம்பளம் வழங்குவதில் ஹொங்கொங் மூன்று இடங்கள் முன்னேறி 5ஆவது இடத்தையும், சிங்கப்பூர் 16ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

ஜப்பான், இந்தியா, சீனா ஆகியவை உலகளாவிய தரவரிசையில் முறையே இரண்டு, மூன்று மற்றும் நான்காவது இடங்களைப் பிடித்துள்ளன.

# பதவி விலகும் கம்போடிய பிரதமர் மகனுக்கு முடிசூட்ட முடிவு



கம்போடியாவை பல ஆண்டுகளாக ஆட்சி செய்து வரும் பிரதமர் ஹுன் சென் (70)அப்பதவியிலிருந்து மூன்று வாரங்களில் விலகி, தன் மூத்த மகனை அமரவைக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

### அமோக வெற்றி

தென்கிழக்கு ஆசிய நாடான கம்போடியாவை கம்போடிய மக்கள் கட்சித் தலைவர் ஹுன் சென், கடந்த 38 ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகிறார்.

அங்கு பாராளுமன்றுக்கு சமீபத்தில் நடந்த தேர்தலில் மொத்தமுள்ள 125 இடங்களில் 120 இடங்களில் கம்போடிய மக்கள் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இதன் வாயிலாக அந்நாட்டின் பிரதமராக ஹுன் சென் மீண்டும் பொறுப்பேற்றார்.

எதிர்க்கட்சிகள், சிவில் சமூகம் மற்றும் ஊடகங்கள் தடையின்றி செயற்பட முடியாத சூழலில் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளதாக ஐரோப்பிய யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத் தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்தப்படவில்லை என குற்றஞ்சாட்டியுள்ள அமெரிக்கா, ஜனநாயகத்தைக் குறைத்து மதிப்பிடும், வெளிநாட்டு உதவித் திட்டங்களை இடை நிறுத்தம் செய்யும் தனி நபர்கள் மீது விசா கட்டுப்பாடுகளை விதிக்க முடிவுசெய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிரதமர் பதவியிலிருந்து மூன்று வாரங்களில் விலகி 45 வயதான தன் மூத்த மகன் ஹுன் மானெட்டை பிரதமர் பதவியில் அமர வைக்கவுள்ளதாக கம்போடிய பிரதமர் ஹுன் சென் அறிவித்தார்.

### பொறுப்பு

இது தொடர்பாக, மன்னர் நொரோடோம் ஷியாமோனியிடம் தகவல் தெரிவித்து விட்டதாகவும் அவர் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் ஹுன் சென் தெரிவித்தார்.

ஓகஸ்ட் 22 இல் பொறுப்பேற்கவுள்ள புதிய அரசில் புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அமைச்சர் பொறுப்புகளை வகிப்பர் என்றும் அவர் தெரிவித்தார்.

# மரத்தின் உச்சியில் பரண் அமைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டவர் வெயாங்கொடையில் கைது

வெயாங்கொடை, மாரபொல பிரதேசத்தில் பெரிய மரத்தின் உச்சியில் அமைக்கப்பட்டிருந்த பரணில் இருந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பெண்ணொருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மாரபொல பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயின், 06 தேசிய அடையாள அட்டைகள், 5 வெளிநாட்டுப் பயண ஆவணங்கள் மற்றும் 8 கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தனது வீட்டை அண்டிய வனப்பகுதியில் உள்ள பெரிய மரத்தின் உச்சியில் யாரும் சந்தேகிக்காத வகையில் கட்டைகள் மற்றும் பலகைகளால் கட்டப்பட்டுள்ள இந்த பரணில் இருந்து போதைப்பொருள் வர்த்தகத்தை நடத்தி வந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



தரையிலிருந்து சுமார் 100 அடி உயரத்தில் இந்த பரண் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு பையில் பணத்தை வைத்து கயிற்றின் உதவியுடன் பரணுக்கு அனுப்பிய பின்னர், பரணிலிருந்து தூள் கீழே இறக்கப்பட்டுள்ளது.

அந்த பரணில் இருந்து சுற்றுவட்டாரப் பகுதிகளை பரவலாக அவதானிக்க முடியும், வெளியாட்கள் உள்நுழைவதை அவதானிக்க முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெரோயின் வாங்குவதற்கு பணம் இல்லாதவர்கள் கையடக்கத் தொலைபேசிகள், தேசிய அடையாள அட்டைகள் அல்லது வெளிநாட்டு கடவுச்சீட்டுகளை அடகு வைத்து ஹெரோயின் போதைப்பொருளை வாங்கியுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைத்தொலைபேசிகளின் பின்புறம் கொடுக்கப்பட்ட ஹெரோயின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தனது கணவருடன் இணைந்து இந்த மோசடியை சில காலமாக வெற்றிகரமாக நடத்தி வந்துள்ளதுடன், சந்தேகநபரின் கணவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம்

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய பொலிஸ் மா அதிபரினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் வழங்கப்பட்டவர்களுள் 7 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், 4 பதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் அடங்குகின்றனர்.

# கிணற்றில் வீழ்ந்த குழந்தை உயிரிழப்பு

வாரியபொல - பண்டாரகொஸ்வத்தை பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து 4 வயதான குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

குழந்தை வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் பின்புறத்தில் காணப்பட்ட கிணற்றின் சுமார் 2 அடி உயரம் கொண்ட மதிலின் ஊடாக குழந்தை கிணற்றில் வீழ்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





***பேருவளை பொலிஸ் பிரதேசத்தின் மக்கள் பாதுகாப்புப் பிரிவின் மாதாந்தக் கூட்டமும் பேருவளை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் - பொது மக்கள் உறவு பிரிவின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஜே.எஸ்.பீ .சில்வாவின் பிரியாவிடை நிகழ்வும் பேருவளை ஸாரா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றன. நிகழ்வில் முன்னாள் காதி நீதிபதி அல் ஹாஜ் மிர்ஸுக் பளீல் விஷேட உரை நிகழ்த்தினார். பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார மற்றும் பொலிஸ் நிலைய ஆலோசனையாளர்களான அல் ஹாஜ் எம். இக்பால் ஸம்ஸுதீன், எம்.எச்.எம். உவைம், மௌலவி எம்.டபிள்யு.எம் பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி) ஸிவில் பாதுகாப்பு உறுப்பினர் முஹம்மத் ஆதில் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள் பேருவளை பீ.எம் முக்தார் )***

# ஆதிபராசக்தி அன்பு இல்லம் அகலவத்தையில் திறந்துவைப்பு





மேல் மருவத்தூர் அன்னை ஆதிபரா சக்தியின் அன்புத் தொண்டர்களின் நிதியுதவியில் அம்மாவின் அன்பு இல்லம் களுத்துறை மாவட்டத்தில் திறந்துவைக்கப்பட்டு, பயனாளர்களுக்கு வழங்கப்பட்டது.

அகலவத்தை, டார்டன்பீல்ட், கணபதி அறநெறி பாடசாலையின் நிறுவுனர் சதாசிவம் உதயசாந்தனின் ஏற்பாட்டில் இந்தப் புதிய இல்லத்தை பாலிந்தநுவர பிரதேச செயலகத்தின் செயலாளர் மற்றும் களுத்துறை மாவட்ட சமூக செயற்பாட்டாளர் திருமதி தனலட்சுமி மாதவன் ஆகியோரினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு டெல்கித், அல்கஸ்ஹேன தோட்டத்தைச் சேர்ந்த நலிவுற்ற குடும்பத்தினருக்கு கையளிக்கப்பட்டது.



இதன்போது சமூக செயற்பாட்டாளர் திருமதி. தனலட்சுமி மாதவனின் நிதியுதவியில் அந்த க்குடும்பத்தினருக்கு உலருணவுப் பொருட்கள், கற்றல் உபகரணங்கள், குழந்தைகளுக்கான ஆடைகள் உள்ளிட்டவை வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அரசு அதிகாரிகள் மற்றும் சமூக தன்னார்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். களுத்துறை மாவட்டத்தில் மேல் மருவத்தூர் அன்னை ஆதிபரா சக்தியின் அன்புத் தொண்டர்களின் நிதியுதவியில் இதுவரை 13 வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டு நலிவுற்ற குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைவிரல் அடையாளம் பதியும் இயந்திரம் திருத்தம்

## தென்மராட்சி பிரதேச செயலகம் அறிவிப்பு

*சாவகச்சேரி நிருபர்*

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடவுச்சீட்டிற்கான கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் இயந்திரம் திருத்தப்பட்டு மீளவும் சேவை இடம்பெறுவதாக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இணையவழி ஊடாக கடவுச்சீட்டிற்கு விண்ணப்பித்து கைவிரல் அடையாளத்தை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யும் முறைமை அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை மற்றும் தென்மராட்சி ஆகிய இரு பிரதேச செயலகங்களிலும் கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்பட்டு வந்த நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன்பாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உள்ள கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் பழுதடைந்திருந்தது. இந்நிலையில், கடவுச்சீட்டிற்கு இணையம் ஊடாக விண்ணப்பித்து கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்வதற்காக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை தெரிவு செய்தவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக பிரதேச செயலகத்தினர் கொழும்பிலுள்ள உரிய திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியும் சீர்செய்யப்படாத நிலையில் இது தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்த நிலையில் தற்போது இயந்திரம் திருத்தப்பட்டு மீள சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி ஆசிரியர் தாக்குதல்

## சக ஆசிரியர்கள் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம்





திகாமடுல்ல செய்தியாளர்

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியின் ஆசிரியர் மீது அதே பாடசாலை மாணவர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் ஒன்று புதன்கிழமை(26) இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த ஆசிரியர் சிகிச்சைகளுக்காக அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாடசாலை சக ஆசிரியர்களால் வியாழக்கிழமை(27) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

''வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், கைது செய்யப்படும்வரை போராடுவோம், வெளியேற்று வெளியேற்று ஒழுக்கமற்ற மாணவர்களை வெளியேற்று'' - என இதன்போது கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பதாகைகளையும் தாங்கியவாறு ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு வலியுறுத்தியும் மேற்படி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, பாடசாலை நிறைவடைந்து ஆசிரியர் வீடு சென்ற சந்தர்ப்பத்தில் அந்தப் பாடசாலையில் உயர்தரத்தில் கற்கும் இரு மாணவர்களும் அவர்களது உறவினர்களும் இணைந்து ஆசிரியர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதன்போது, ஆசிரியரின் சைக்கிள் மற்றும் அவரது உடமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. பாடசாலையின் ஒழுக்கக் கோவையை செயற்படுத்துவதில் ஏற்பட்ட முரண்பாட்டாலேயே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், சந்தேகநபர்கள் தற்போது தலைமறைவாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. எனினும், அவர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பாக்கு நீரிணையை நீந்திக்கடந்த மதுஷிகனுக்கு மட்டக்களப்பு செயலகத்தினால் கௌரவம்



மட்டக்களப்பு

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரும் ஜனாதிபதி விருது பெற்ற சிரேஷ்ட சாரணருமான தவேந்திரன் மதுஷிகன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்தமையை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் கௌரவமளிக்கும் நிகழ்வு புதன்கிழமை(26) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நினைவுச்சின்னம் மற்றும் நிதி அன்பளிப்பு வழங்கி மதுஷிகன் கௌரவமளிக்கப்பட்டார்.

மதுஷிகன், தனது சாதனை நீச்சல் பயணத்தில் 30 கிலோ மீற்றர் தூரமுடைய பாக்கு நீரிணையை சுமார் 12 மணித்தியாலம் 58 நிமிடங்களில் நீந்திக் கரை சேர்ந்ததுடன், இதுவரை நீச்சல் திறமைக்காக 12 பதக்கங்களையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், உதவி மாவட்டச் செயலாளர் ஏ.நவேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி, பிரதம கணக்காளர் எம்.எஸ்.பஷீர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆர்.காயத்திரி, கணக்காளர் எம்.வினோத், நிர்வாக உத்தியோகத்தர் கணபதிப்பிள்ளை மதிவண்ணன், பொறியியலாளர் ரீ.சுமன், சமுர்த்தி திணைக்களப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# தலைமைத்துவ ஒருநாள் பயிற்சிப் பட்டறை



மாளிகைக்காடு செய்தியாளர்

முஸ்லிம் வாலிபர் சங்கம் மாவடிப் பள்ளி கிளையின் அனுசரணையுடன் உளவியல் ஆலோசனை மற்றும் தலைமைத்துவ ஒருநாள் பயிற்சிப்பட்டறை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சாய்ந்தமருது பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் புதன்கிழமை(26) இடம்பெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும் மாவடிப்பள்ளி வை.எம்.எம்.ஏயின் தலைவருமான எஸ்.ஏ.முஹம்மட் அஸ்லம் தலைமையிலும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எம்.ஐ.எம்.றியாஸின் ஆலோசனையிலும் மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டிலும் அமைப்பின் உயர்பீட உறுப்பினர்களின் ஒழுங்குபடுத்தலிலும் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.பி.சரத் சந்தரபால பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அதிதிகளாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாணக் காரியாலய நிர்வாக உத்தியோகத்தர் பி.தியாகராஜா, நிலையத்தின் பொறுப்பதிகாரி எ.ஹமீர், கிழக்கு மாகாண காரியாலய உத்தியோகத்தர்கள், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஏ.அலி, நிலையத்தின் போதனாசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

சாய்ந்தமருது இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தில் கல்வி பயிலும் 50 இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு விரிவுரை மற்றும் செயற்பாட்டு ரீதியிலான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இப்பயிற்சிப் பட்டறையின் வளவாளராக முன்னாள் தேசிய இளைஞர் படையணி வாழைச் சேனை பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி மேஜர் கே.எம்.தமீம், சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.இர்பான் மௌலானா ஆகியோரால் விரிவுரைகளும் பயிற்சிகளும் நடத்தப்பட்டதுடன் அன்று மாலை இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் இளைஞர் சேவை அதிகாரி மோகன்ராஜ், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.ஜெஸ்மீர் ஆகியோர் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

# ஒட்சிசன் நிலையம் திறந்துவைப்பு



அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை - கந்தளாய் ஆதார வைத்தியசாலையின் புதிய மருத்துவ ஒட்சிசன் நிலையம் அவுஸ்திரேலியாவின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூரினால் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த ஒட்சிசன் தொகுதியானது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் UNOPS சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் ஊடாக நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டது. குறித்த ஒட்சிசன் தொகுதியானது, சுமார் 600,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியானது எனவும் இந்த ஒட்சிசன் நிலையானது ஒரு நாளைக்கு 70 பெரிய சிலிண்டர்களை (Jumbo Cylinders) 95வீத தூய்மையுடன் நிரப்பும் திறன் கொண்டது எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் போல் ரொஷான் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் UNOPS நிறுவனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.



சமுர்த்தி பயன்பெறும் குடும்பங்களில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு தேடும் இளைஞர் - யுவதிகளுக்கு அது தொடர்பான தொழிற் பயிற்சியை வழங்கும் விழிப்பூட்டல் வேலைத்திட்டம் புதன்கிழமை(26) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யஹ்யா றாசித், தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஃமதுல்லாஹ், கருத்திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர், முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.சீ.எம்.தஸ்லீம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை திட்டமிடல் உத்தியோகத்தர் மௌசூன் வளவாளராகக் கலந்து கொண்டார்.

படம்: திராய்க்கேணி செய்தியாளர்

# கோணாவத்தை பிரதேசத்தின் அபிவிருத்திக் கலந்துரையாடல்



திகாமடுல்ல, தீகவாபி, கோணாவத்தை செய்தியாளர்கள்

அட்டாளைச்சேனை, கோணாவத்தை பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.எம்.ஷாபிர் தலைமையில் புதன்கிழமை(26) இடம்பெற்றது.

ஓர் ஊரின் ஆரம்பத்தில் தொடங்கி ஊரின் முடிவில் நிறைவுறும் கோணாவத்தை ஆற்றை எல்லைப்படுத்துவதுடன், அதன் இரு பக்கங்களையும் அழகுபடுத்தும் பொருட்டு இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோணாவத்தை அபிவிருத்திக் குழுவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீல.மு.காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை கலந்துகொண்டிருந்தார்.

பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து கோணாவத்தை அபிவிருத்திக் குழு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன. குறித்த வேலைத்திட்டத்தில் அவசரமானதும் அவசியமானதுமான ஒருசில வேலைத்திட்டங்களை அடையாளப் படுத்தியதுடன், அதனை மேற்கொள்ளத் தேவையான வளங்கள் தொடர்பிலும் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு ஆராயப்பட்டது.

அந்த வகையில், அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றை எல்லையிடும் பணிகள் ஏற்கனவே முதற்கட்டமாக பெரியபாலத்தடியில் இருந்து தைக்கா நகர் வரை முடிவுறுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டில் இருந்து கொட்டுப்பாலம் வரைக்கும் எல்லை இடப்பட்டது. எல்லையிடப்படாமல் நிறுத்தப்பட்டுள்ள கொட்டு பாலத்திலிருந்து பெரிய பாலத்தடி வரை ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள காணி உரிமையாளர்களை அழைத்து எல்லையிடுவதற்கான பணிகளை அக்கரைப்பற்று நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ளுதல் என்றும் கோணாவத்தை ஆற்றில் சல்மினியா நிரம்பியுள்ளதால் வடிச்சல் நீர் ஓடுவதற்கு தடையாகவுள்ளதுடன், முதலைகளினால் இப்பிரதேச மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே, இதனை துப்புரவு செய்வதற்கு அக்கறைப்பற்று நீர்ப்பாசனத் திணைக்களம் அவசர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், கோணாவத்தை ஆற்றில் நீரோடுவதற்கு தடையாக சல்மினியா நிரம்பியுள்ள பகுதியையும் கோணாவத்தை ஆற்றில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் பாலத்தின் பணிகளையும் பார்வையிட்டதோடு அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு பகுதியில் வடிச்சல் ஓடுவதற்கு தடையாக உள்ள பகுதியையும் குறித்த குழுவினர் பார்வையிட்டனர்.

இதன்போது அட்டாளைச்சேனை பிரதேச சபை விசேட ஆணையாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, அட்டாளைச்சேனை கோணாவத்தை அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள், அட்டாளைச்சேனை நீர்ப்பாசனக் குழுவினர், விவசாய அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



காரைதீவு கல்விக் கோட்டத்துக்குட்பட்ட மாளிகைக்காடு அல்-ஹுஸைன் வித்தியாலயத்தில் பொதுப் பரீட்சைகளில் திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை(27) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. அதிபர் அல்ஹாஜ் ஏ.எல்.எம்.ஏ.நழீர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

படம்: நிந்தவூர் செய்தியாளர்



அக்கரைப்பற்று அஸ்-ஸிராஜ் மகாவித்தியாலய கலைக்கூடத்தில் இடம்பெற்ற வலயமட்ட தமிழ்த் தின விழாவில் ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர், பல்துறைக் கலைஞர் ஜே.வஹாப்தீன் கோட்டமட்ட தமிழ் தினப் போட்டிகளில் செயலாளராக சிறப்பான பங்களிப்பை வழங்கியமைக்காக மேற்படி சான்றிதழ் வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாவினால் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அத்துடன், தமிழ் மொழிப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

படம்: மருதமுனை செய்தியாளர்

# மாணவர் சட்டமன்றம் அங்குரார்ப்பணம்



வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

கிரான் மத்திய கல்லூரியில் மாணவர் சட்ட மன்றம் அங்குரார்ப்பணம் செய்தல் மற்றும் அறிமுகப் பயிற்சி நிகழ்வும் கல்லூரி அதிபர் மா.தவராஜா தலைமையில் புதன்கிழமை(26) இடம்பெற்றது.

பழைய மாணவர் அமைப்பின் தலைவர் சி.சுகிதரனின் வரவேற்புடன் அதிதிகள் மலர்மாலை அணிவித்து மாணவர்களினால் வரவேற்கப்பட்டதுடன் மங்கள விளக்கேற்றல் நிகழ்வும் இடம்பெற்றது.

பிரதம அதிதி மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ்வினால் மாணவர் சட்ட மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது. யாழ்ப்பாண பல்கலைக் கழக சட்ட பீட விரிவுரையாளர் சட்டத்தரணி திருமதி சுபாசினி ருமணன் சட்டம் தொடர்பான அறிமுகத்தை மாணவர்களுக்கு தெளிவு படுத்தினார்.

அதன்பின்னர் பிரதம அதிதி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து அவர் சட்டம் தொடர்பாக மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக உரையாற்றினார்.

இந்நிகழ்வில் கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் த.அனந்தரூபன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜெயவதனன், சிறப்பு அதிதியாக கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு மற்றும் கிரான் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர். வரலாற்றில் முதன்முதலாக இந்நிகழ்வு மேற்படி கல்லூரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





தொழில் பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நடத்தப்படும் இளைஞர்களுக்கான தொழில் பயிற்சி மற்றும் வழிகாட்டல் செயலமர்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் புதன்கிழமை (26) இடம்பெற்றது.சமுர்த்தி திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸீஸ் இணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதியாக பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது ஷாபிர் கலந்து கொண்டதுடன், வளவாளராக தொழில் பயிற்சி அதிகார சபையின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.எம்.மஹ்ரூஃம் கலந்துகொண்டார். சமுர்த்தி வங்கிச்சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ரீ.பரமானந்தம், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.கே.எம். ஹனீபா, திட்ட உத்தியோகத்தர் எம்.எவ்.நவாஸ், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஸபான், சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் எம்.எஸ். அப்துல்லாஹ் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் தொழில், தொழில் பயிற்சிக்கு விண்ணப்பித்த இளைஞர், யுவதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

படம்: திராய்க்கேணி செய்தியாளர்

# கல்முனை வீதிகளில் பொருட்கள், பதாகைகளை காட்சிப்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை

சாய்ந்தமருது செய்தியாளர்

கல்முனை மாநகர வீதிகளில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக விளம்பரப் பதாகைகள் மற்றும் வியாபாரப் பொருட்களை காட்சிப்படுத்தும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்விடயம் தொடர்பான விசேட கலந்துரையாடல் கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை(27) நடைபெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - மட்டக்களப்பு நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பிரதான வீதியோரங்களில் வர்த்தக நிலையங்களின் விற்பனைப் பொருட்களும் அவற்றின் பெயர்ப் பலகைகள் மற்றும் விளம்பரப் பதாகைகளும் பெருமளவில் காட்சிப்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இவை நடைபாதைகளையும் வடிகான்களையும் ஆக்கிரமித்திருப்பது மாத்திரமல்லாமல், அவற்றையும் தாண்டி வீதிகளில் கூட பொருட்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அனுமதிக்கப்படாத தெருவோர அங்காடி வியாபாரங்களும் நடைபெறுகின்றன. அத்துடன், வீதிகளில் வாகனங்களை நீண்ட நேரம் தரித்து வைப்பதும் நடமாடும் வியாபார வாகனங்களை நிறுத்தி வைத்து வியாபாரம் மேற்கொள்வதும் சாதாரணமாக இடம்பெற்று வருகின்றன.



இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளினால் வீதிகளில் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுவதுடன் விபத்துகளும் சம்பவிக்கின்றன. இதனால் வீதியோரமாக பாதசாரிகள் நடந்து செல்வதற்குக்கூட இடமின்றி அசௌகரியங்களையும் ஆபத்துகளையும் எதிர்நோக்கி வருகின்றதாக மேலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறான இடையூறுகள் மற்றும் ஆபத்தான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டும் வீதிகளை ஒழுங்குபடுத்தி அழகுபடுத்தும் நோக்கிலும் மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொலிஸார் இணைந்து உரிய நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், மாநகர பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் இஸட்.ஏ.எம்.அஸ்மீர், மாநகர சபையின் வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

# வீதியோர மரங்களினால் பயணிகள் அசௌகரியம்

நிந்தவூர் செய்தியாளர்

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய இடங்களில் உள்ள உள்ளூர் வீதி ஓரங்களில் வளர்ந்து காணப்படும் மரங்களினால் வீதியில் பயணிக்கும் பயணிகளும் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த பல வருடங்களாக வீதிகளுக்கருகாமையில் உள்ள வீடுகள் அமைந்துள்ள பகுதிகளில் நடப்பட்ட மரங்கள் தற்போது வளர்ந்து அவற்றின் கிளைகளும் இலைகளும் வீதியின் மத்திய பகுதிக்கு வந்துள்ளன.

இதனால் விசேடமாக தென்னை மரங்களிலிருந்து திடீரென விழும் தேங்காய், காய்ந்த ஓலைகள் மற்றும் பாளை என்பவற்றால் வீதியில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகி அதனால் உபாதைக்கும் உள்ளாகி வருகின்றனர்.

அத்துடன், வீதி ஓரங்களில் உள்ள மின் கம்பிகள் மற்றும் தொலைபேசி வயர்களில் மரக்கிளைகள் தொட்டுக்கொண்டு காணப்படுவதாலும் சில வேளைகளில் விழுந்த ஓலைகள் இவற்றில் தொங்கிக்கொண்டு காணப்படுவதனாலும் சேதம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போதைப்பொருள் தடுப்பு குறித்த பயிற்சிப் பட்டறை

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்களுக்கான பயிற்றுனருக்கான பயிற்சிப் பட்டறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர் ப.தினேஷ் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(25) இடம்பெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்களுக்கான ஆறுமாதகால பயிற்றுனருக்கான பயிற்சிப் பட்டறையில் கிராம மட்டங்களில் போதைப்பொருள் பாவனையையும் அதன்மூலம் ஏற்படும் பிரச்சினைகளையும் குறைப்பதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வலுப்படுத்தும் செயலமர்வாக இடம்பெற்றது.



மேலும் கிராம, பிரதேச மட்டத்தில் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்குத் தேவையான உளவள ஆலோசனையும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வளவாளராக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சி அதிகாரி ஏ.சி.றஹீம் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரிய ஹர்த்தாலுக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆதரவு

கல்லடி செய்தியாளர்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இன்று வெள்ளிக்கிழமை(28) அனுஷ்டிக்கப்படுகின்ற பூரண ஹர்த்தால், கடையடைப்பு போராட்டத்துக்கு ஈரோஸ் ஜனநாயக முன்னணி தனது ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் லக்ஸ்மன் லக்கி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தால் மற்றும் முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள மனிதப் புதைகுழிக்கு பக்கச்சார்பற்ற நீதிவிசாரணை கோரி நடத்தப்படும் அனைத்து அறவழிப் போராட்டத்துக்கும் ஈரோஸ் ஜனநாயக முன்னணி தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாக எமது அரசியல் கட்சி கருதுகின்றது. அந்தவகையில், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தின் நியாயத் தன்மையை எமது கட்சி உணர்ந்து மதிக்கின்றதுடன், அதற்கு எமது முழு ஆதரவையும் பங்களிப்பையும் வழங்குகின்றோம் என்பதுடன் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் வெற்றிபெற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் இவ்வேளையில் வினயமுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இதனையேற்று அரசியல் கட்சிகள், மாணவர் அமைப்பினர்கள், தனியார் துறையினர், போக்குவரத்துத் துறையினர், சட்டவாளர்கள், இனவுணர்வாளர்கள், சமயத்தலைவர்கள், பொது மக்கள், சமய மற்றும் சமூக அமைப்பினர்கள், பொது அமைப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் இதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு ஈரோஸ் ஜனநாயக முன்னணி கட்சியினராகிய நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்றுள்ளது.

## போடியார் புலம்பல்!



சர்வகட்சி கூட்டம் ஒரேமாதிரியா ரணில் ஐயா நடத்தி முடிச்சுப்போட்டாரு... வழமைபோல கூடிக்கலைந்தாச்சி எலுவா..? இனி அடுத்த மாதம் அடுத்த கூட்டம் இப்படியே பேய்க்காட்டிப்போட்டு அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்துனா அதோட 13ஐ பொட்டிக்க போட்டு மூடவேண்டியதுதான்..!

# தங்கச் சங்கிலி அபகரிப்பு: இளைஞன் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள இருதயபுரம் பகுதி வீடொன்றில் வசித்து வந்த வயோதிபப்பெண் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்த சந்தேக நபரொருவரை மட்டு. தலைமையகப் பொலிஸார் புதன்கிழமை(26) கைதுசெய்துள்ளனர்.

இருதயபுரம் மேற்கு 8ஆம் பிரிவிலுள்ள வயோதிபப் பெண்ணொருவர் தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள உறவினர் வீட்டுக்கு சம்பவதினம் மாலை 4.30 மணியளவில் சென்று வீடு திரும்பிய நிலையில் வீட்டின் வெளிப்பகுதியிலுள்ள மலசலகூடம் நோக்கி அவசரமாகச் சென்று கொண்டிருந்தபோது அவரைப் பின்தொடர்ந்துவந்த சந்தேகநபர், அவரின் கழுத்திலிருந்த ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு அவரை கீழே வீழ்த்தி தள்ளிவிட்டு தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதையடுத்து வீட்டில் பொருத்தப்பட்ட சிசிரிவி கெமரா மூலம் குறித்த சந்தேக நபரை அடையாளம் கண்டுகொண்ட பொலிஸார் வயோதிபப் பெண்ணின் அயல் வீட்டைச்சேர்ந்த 24 வயது இளைஞன் ஒருவரை கைதுசெய்ததுடன் திருடப்பட்ட தங்கச் சங்கிலியையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**சாய்ந்தமருது கோட்டத்தில் இடம்பெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிகளில் அதிக இடங்களைப் பெற்ற கமு/மல்ஹரூஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய மாணவர்களுக்கான சான்றிதழை அதிபரும் எழுத்தாளருமான திருமதி ரிப்கா அன்சார் வழங்கிவைத்தார்.**

**படம்:** நற்பிட்டிமுனை செய்தியாளர்

# குளத்துக்கான நீர் இன்மையால் அவதி

தோப்பூர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் அல்லைக்குளத்துக்கான நீர் வந்து சேரவிடாமல் வாய்க்கால் மறிக்கப்படுவதாக தோப்பூர் பிரதேச குடியிருப்பாளர்கள் மற்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குளத்துக்கு நீர் எடுத்துச்செல்வதற்காக மட்டும் வெட்டப்பட்ட இக்கால்வாயை நெற்செய்கையாளர்கள் பல இடங்களில் மறித்து நீர்ப்பாய்ச்சுவதனால் குளம் முழுமையாக வற்றி வரண்டு காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குளத்தை நம்பி இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட கன்னாவெளி, அல்லைக்குழி மற்றும் கிரான்வெளி பிரதேச விவசாயிகள் இரவு பகலாக நீர்ப்பம்பிகள் மூலம் நீர்ப்பாய்ச்சி வருவதனால் மேலதிக செலவு ஏற்படுவதாகத் தெரிவிக்கும் விவசாயிகள், அல்லைக்குளத்தை நிர்வகிக்கும் பிரதான நீர்ப்பாசன பொறியியலாளர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி குளத்துக்கு நீர் பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

மண்டூர் செய்தியாளர்

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பலவத்தை பிரதேசத்தில் விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் புதன்கிழமை(26) இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்டூர், தம்பலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 05 பிள்ளைகளின் தந்தையான பொன்னம்பலம் அரியதுரை (72) என்பவரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

கடந்த 24ஆம் திகதி தனது உறவினர் வீட்டிலிருந்து தனது வீட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் இரவுவேளையில் சென்று கொண்டிருக்கும்போது தவறுதலாக வீதியின் அருகில் நின்ற மரத்தில் மோதி படுகாயமடைந்த நிலையில், சம்பவத்தை அவதானித்த உறவினர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற்று வந்தநிலையில் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழில் முனைவோர் வட்டம் உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம்





மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் இலங்கை பூராகவும் நடைபெற்றுவரும் 'பாடசாலைகளில் தொழில் முனைவோர் வட்டங்களை உருவாக்குதல்' எனும் நிகழ்ச்சித்திட்டம் புதன்கிழமை(26) நடைபெற்றது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக மாணவர்களுக்கு தொழில் முனைவோர் வட்டம், இலங்கை மத்திய வங்கியின் நிதியில் தூய நாணயக் கொள்கை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது இலங்கை மத்திய வங்கி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அதிகாரிகளால் எடுத்துரைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் க.சத்திய மோகனின் நெறிப்படுத்தலில் பிரதி அதிபர் திருமதி சுகன்யா சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய முகாமையாளர் க.பிரபாகரன், மத்திய வங்கியின் திருகோணமலை முகாமையாளர் ஏ.எம்.நிரோஷன் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி கௌசல்யா ஸ்ரீகாந்தன், வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் நா.கோகுலதாஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது வேலைவாய்ப்பை எதிர்பார்த்து படிக்கும் ஒரு நபரை அல்ல, நாட்டில் நிலவும் பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்கும் வேலைவாய்ப்பை உருவாக்குபவரையே பாடசாலையிலிருந்து சமூகத்துக்கு கொண்டு வரவேண்டும். சவால்களுக்கு பதில் வழங்கும் வர்த்தக வாய்ப்பாக மாற்றக்கூடிய சிறந்த இலங்கையரை உருவாக்கும் நோக்குடன், இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறு தொழில் முயற்சியில் ஈடுபடும் மாணவர் சமுதாயத்துக்கு எதிர்காலத்தில் வெண்கலப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், தங்கப் பதக்கம், ஜனாதிபதி விருது வழங்கும் செயற்பாடுகளும் காத்திருக்கின்றதாக இதன்போது வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

# அஸ்வெசுமவுடன் இணைந்த சமுர்த்தி வேலைத்திட்டம் குறித்த செயலமர்வு



மட்டக்களப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கிணங்க நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'அஸ்வெசும' திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் சமுர்த்தி வேலைத்திட்டம் தொடர்பான செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை (25) இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்ற இச்செயலமர்வில் அஸ்வெசும திட்டம் சமுர்த்தி திட்டத்தினூடாக இணைந்து மேற்கொள்ளும் வேலைத்திட்டம் குறித்து இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

அஸ்வெசும வேலைத் திட்டத்தினால் மக்களை விழிப்படையச் செய்து சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் வங்கி முகாமைத்துவம், களமற்றும் வங்கி பணிக்குழுவினருக்கு மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 46ஆயிரம் குடும்பங்கள் குறித்த அஸ்வெசும திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அதனை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், சமுர்த்தித் திட்டத்தின் புதிய பயணப் பாதையாக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களை தொடர்ந்தும் நலனுதவியில் தங்கியிருக்கும் மனப்பாங்கிலிருந்து விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள நாம் முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இச்செயலமர்வில் மாவட்ட செயலக சிரேஷ்ட முகாமையாளர் எம்.மனோகிதராஜ், முகாமையாளர் நிர்மலா மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், வலய உதவியாளர்கள், வங்கி மற்றும் வங்கிச்சங்க கட்டுப்பாட்டு சபைத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# நீரில் மூழ்கி இளைஞன் பலி

மண்டூர் செய்தியாளர்

கொக்கட்டிச்சோலை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை பிரதேசத்தில் ஆலய வழிபாட்டுக்குச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் புதன்கிழமை(27) மாலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எருவில், களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 19வயதுடைய மோகனசிங்கம் பிரகதீஸ் என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். சம்பவ தினத்தன்று தனது வீட்டிலிருந்து தாந்தாமலை ஆலயத்துக்கு வழிபாட்டுக்காகச் சென்று ஆலயத்தின் அருகிலுள்ள குளத்தில் நண்பர்களுடன் நீராடிக்கொண்டிருந்தபோது நீரில் மூழ்கியதை அவதானித்த நண்பர்கள் நீரிலிருந்து மீட்டெடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்தபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilaneditor@gmail.com

# நவலோக கொலேஜ் ஒஃவ் ஹையர் ஸ்டடிஸ் நிலையத்துக்கு மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் விநியோகம்

மஹிந்திரா வாகன பொருத்துகை மற்றும் மஹிந்திரா வாகனங்கள் விநியோகத்திலும் மஹிந்திரா உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதிலும் நிபுணத்துவம் பெற்ற ஐடியல் குழுமத்தின் துணை நிறுவனமான ஐடியல் மோட்டர்ஸ் நவலோக குழுமத்தின் கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள நவலோக கொலேஜ் ஒஃவ் ஹையர் ஸ்டடிஸ் நிலையங்களுக்கு அவற்றின் வலுத் தேவைகளை நிர்வகித்துக் கொள்வதற்காக இரு மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்களை விநியோகித்துள்ளது.

தற்போது மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் 28 மாதிரிகளில் கிடைக்கின்றன. அவை 5 KVA முதல் 625 KVA வரையில் அமைந்திருப்பதுடன் அவற்றை கவர்ச்சிகரமான விலையில் நாடு முழுவதிலும் காணப்படும் ஐடியல் மோட்டர்ஸ் கிளை வலையமைப்பிலிருந்து கொள்வனவு செய்து கொள்ள முடியும். பவரோல் ஜெனரேற்றர்களில் மஹிந்திரா என்ஜின் காணப்படுவதுடன் , Leroy-Somer எனும் புகழ் பெற்ற ஐரோப்பிய தொழில்நுட்பத்தினூடாக வலுப் பிறப்பாக்கல் அலகு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், மஹிந்திரா பவரோலில் உலகத் தரம் வாய்ந்த DPC (Digital Power Control) பயன்படுத்தப்படுவதால் சிறந்த எரிபொருள் சிக்கனம், குறைந்த கசிவுகள் மற்றும் தங்கியிருக்கக் கூடிய வலு வெளியீட்டை வழங்குகின்றன.

சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பவரோல் ஜெனரேற்றர்கள் பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன. சௌகரியமானதும் அளவில் சிறியதாகவும் அமைந்துள்ள 5 KVA ஒற்றைக் கட்டமைப்பு ஜெனரேற்றர் 10 KVA முதல் 30 KVA ஒற்றைக் கட்டமைப்பு ஜெனரேற்றர் கட்டமைப்பு மற்றும் 10 KVA முதல் 625 KVA மூன்று கட்டமைப்பு ஜெனரேற்றர் போன்றன அடங்குகின்றன. 2017 இல் மஹிந்திரா பவரோல் டீசல் ஜெனரேற்றர்களை நாட்டில் விநியோகிக்கும் ஏக உரிமை ஐடியல் மோட்டர்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. அன்று முதல்,பாரியளவு மற்றும் சிறியளவு நிறுவனங்களின் வலுத் தேவைகளை நிவர்த்தி செய்வதில் மஹிந்திரா பவரோல் பிரதான பங்களிப்பு வழங்குநராக அமைந்துள்ளதுடன் இதுவரையில் இலங்கையின் ஜெனரேற்றர் சந்தையில் சந்தை முன்னோடி எனும் கீர்த்தி நாமத்தையும் பெற்றுள்ளது.



ஐடியல் குழுமத்தின் பவரோல் தயாரிப்பின் சிரேஷ்ட முகாமையாளர் ஜனக குலதுங்க, மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் பற்றி தெரிவிக்கையில், “மஹிந்திரா பவரோல் தயாரிப்புகள் இலங்கையில் காணப்படும் இந்திய ஜெனரேற்றர் தயாரிப்புகள் வரிசையில் முன்னோடி ஸ்தானத்தைப் பெற்றுள்ளன. எமது சிறந்த விற்பனைக்கு பிந்திய சேவையினூடாக குறுகிய காலப்பகுதியில் எம்மால் இந்தப் பிரத்தியேகமான வெற்றிச் சாதனையை எய்த முடிந்ததையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். மேலும், உலகளாவிய ரீதியில் நுகர்வோர்கள் மத்தியில் அதிகளவு வரவேற்பையும் நன்மதிப்பையும் வென்ற நாமமாக மஹிந்திரா பவரோல் திகழ்கின்றது. தற்போது மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்களினால் பல்வேறு உற்பத்தியாளர்கள், தொழிற்சாலைகள், ஹோட்டல்கள், வங்கிகள் மற்றும் சேவை நிலையங்களுக்கு ஜெனரேற்றர்கள் விநியோகிகப்பட்டுள்ளன” - என்றார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், “குறிப்பாக, மஹிந்திரா டீசல் ஜெனரேற்றர்கள் குறைந்த சத்தத்தில் இயங்குகின்றன. உயர் எரிபொருள் சிக்கனத்தை வழங்குவதுடன் பல வருட காலம் சிக்கல்களின்றி இயங்கும் உத்தரவாதத்தை வழங்குகின்றன. குறுகிய காலப்பகுதியினுள் மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் வாடிக்கையாளர்கள் மத்தியில் அதிகளவு பிரபல்யமடைந்துள்ளன. ஐடியல் மோட்டர்ஸ் நிறுவனத்தினால் வழங்கப்படும் சிறந்த வாடிக்கையாளர் மற்றும் விற்பனைக்கு பிந்திய சேவை போன்றவற்றினால் பெருமளவு வாடிக்கையாளர்கள் கவர்ந்திழுக்கப்பட்டுள்ளனர் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். சிறந்த வாடிக்கையாளர் சேவையைப் பெற்றுக்கொடுக்க எம்மை அர்ப்பணித்துள்ளோம். நாடு முழுவதிலும் காணப்படும் எமது 15 ஐடியல் ஃபஸ்ட் சொய்ஸ் சேவை நிலையங்களினூடாகவும் வாடிக்கையாளர்களின் தேவைகளின் அடிப்படையில் வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுவதுடன் சகாயமான கட்டணங்களில் பெருமளவு சௌகரியமும் சேர்க்கப்படுகின்றன. எமது வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் நலன்புரிச் செயற்பாடுகளை முன்னுரிமையளிக்கும் வகையில் அவர்களின் பெறுமதியான நேரத்தை சேமித்துக் கொள்ளக் கூடிய வகையில் அவசியமான உதிரிப் பாகங்களை ஐடியல் மோட்டர்ஸ் ஊடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளையும் வழங்குகின்றோம்” - என்றார்.

**படம்** – ஜனக குலதுங்க, சிரேஷ்ட முகாமையாளர் (ஐடியல் மோட்டர்ஸ் – பவரோல் தயாரிப்பு) மற்றும் விஜய் துத்தா சிரேஷ்ட முகாமையாளர் – மஹிந்திரா பவரோல் (ஆசியா மற்றும் ANZ) மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்களை நவலோக குழுமத்தின் உயர் கல்வி நிலையங்களின் அதிகாரி ஒருவரிடம் கையளிப்பதைக் காணலாம். ஐடியல் மோட்டர்ஸ் விற்பனைப் பிரிவின் தலைமை அதிகாரி கசுன் பெர்னாண்டோ மற்றும் ஐடியல் மோட்டர்ஸ் பிராந்திய விற்பனை முகாமையாளர் தினேஷ் மானகே ஆகியோரும் அருகில் காணப்படுகின்றனர்.

# காணி–கட்டட சொத்து முதலீட்டுக்கு சிறந்த நிதியுதவியை வழங்குவதற்கு Home Lands Holding உடன் இணையும்

ரியல் எஸ்டேட் துறையை புத்துயிர் பெறச் செய்யும் முயற்சியில் இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, எதிர்கால வீட்டு உரிமையாளர்களுக்கு தங்களுடைய சொந்தக் காணி, கட்டடங்களுக்காக முதலீடு செய்வதற்கு சிறந்த நிதித் தீர்வுகளை வழங்குவதற்காக ரியல் எஸ்டேட் நிறுவனமான Home Lands Holdings இன் உத்தியோகபூர்வ வங்கிப் பங்காளியாகக் கையொப்பமிட்டுள்ளது.




Home Lands இன் விரிவான கோப்புறை முழுவதிலுமுள்ள காணி நிலங்களுக்கும் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கை பொருந்தும். பத்தரமுல்லையில் உள்ள Home Lands தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் இந்தக் கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. HNB இன் பிரதிப் பொது முகாமையாளர் – வாடிக்கையாளர் வங்கிக் குழுமம், சஞ்ஜேய் விஜேமான்ன, HNB AGM தனிப்பட்ட நிதிச் சேவைகள் (PFS), காஞ்சனா கருணாகம மற்றும் Home Lands குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நளின் ஹேரத் மற்றும் HNB மற்றும் Home Lands குழுமத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

“உலகளாவிய தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்ட சவால்கள் இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் ரியல் எஸ்டேட் துறைக்கான கண்ணோட்டம் நேர்மறையானது மற்றும் மீள்தன்மை கொண்டது. ரியல் எஸ்டேட் ஆர்வலர்கள் மற்றும் வருங்கால வீட்டு உரிமையாளர்கள் தங்கள் கனவு வீட்டுக்காக முதலீடு செய்ய விரும்பும் பல முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இந்தத் துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. எனவே, எங்களின் நம்பிக்கைக்குரிய வாடிக்கையாளர்களுக்கு சந்தையில் சிறந்த தேர்வுகளை வழங்குவதற்காக Home Lands இன் உத்தியோகபூர்வ வங்கி பங்குதாரராக கையொப்பமிடுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.” - என HNB AGM – தனிப்பட்ட நிதிச் சேவைகள் காஞ்சனா கருணாகம தெரிவித்தார்.

தனது வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச மதிப்பை வழங்குவதன் மூலம் HNB அவர்களின் கையிலுள்ள பணத்திற்கு ஏற்றவாறு வசதியான மற்றும் நெகிழ்வான திருப்பிச் செலுத்தும் தவணைத் தேர்வுகளை வழங்கும். வீட்டுக்கான அடகு ஆலோசனை சேவைகளும் வங்கியின் முகவர்களால் வழங்கப்படுகின்றன. அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு வசதிக்கேற்ப அனைத்து சட்டபூர்வ ஆவணங்களுடன் உதவுவார்கள்.

“ஒரு கார்ப்பரேட் நிறுவனமாக வருங்கால காணி/வீட்டு உரிமையாளர்களுக்கு அவர்களின் ரியல் எஸ்டேட் தேவைகளுக்கு சிறந்த தீர்வுகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதில் நாங்கள் எப்போதும் உறுதியுடன் இருக்கிறோம். இது எங்கள் நிறுவன நெறிமுறையின் ஒரு பகுதியாகும். இதன் ஒரு பகுதியாக HNB உடனான எங்கள் நீண்டகால உறவைப் பயன்படுத்தி வருங்கால காணி/வீட்டு உரிமையாளர்களுக்கு சந்தையில் சிறந்த தீர்வுகளை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை வலுப்படுத்தியுள்ளோம். மேலும், அவர்களுடன் மீண்டும் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.” - என Home Lands குழும முகாமைத்துவப் பணிப்பாளர் நளின் ஹேரத் தெரிவித்தார்.

“இந்தக் காலத்தில் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு காணி அல்லது வீடு என்ற கனவை நனவாக்க உதவுவதன் மூலம் ரியல் எஸ்டேட் செயற்பாட்டை மேலும் சாத்தியமாக்க மூன்று ஆண்டுகளுக்கு வட்டியில் ஒரு பாகத்திற்கு மானியம் வழங்குவோம்” - என ஹேரத் மேலும் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக இங்கிலாந்தை தளமாகக்கொண்ட புகழ்பெற்ற Banker சஞ்சிகையினால் தொகுக்கப்பட்ட உலகின் சிறந்த 1,000 வங்கிகளின் பட்டியலில் HNB இடம்பிடித்ததுடன் Asian Banker சஞ்சிகையால் நடத்தப்பட்ட மதிப்புமிக்க சர்வதேச வாடிக்கையாளர் நிதிச் சேவைகள் விருதுகள் 2023 நிகழ்வில் 13 ஆவது தடவையாக இலங்கையின் சிறந்த வாடிக்கையாளர் வங்கியாக மகுடம் சூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டேவிட் பீரிஸிடமிருந்து சூரிய சக்தி தீர்வுகள்

நாற்பது வருட நம்பிக்கை, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் விற்பனைக்குப் பின்னரான பிழையற்ற நன்மதிப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ள டேவிட் பீரிஸ் குழுமம், சூரிய சக்தித் தீர்வுகளை ஆரம்பிப்பதன் ஊடாக பசுமை நிறைந்த வலுசக்தித் துறையில் நுழைந்துள்ளது.

வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு அமைய அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தனிப்பயனாக்கப்பட்ட ஒன்-கிரிட் மற்றும் ஓஃப்-கிரிட் தீர்வுகள் வர்த்தக ரீதியாகவும் சில்லறையாகவும் வழங்கப்படுகின்றன. நாடு முழுவதிலுமுள்ள கிளை வலையமைப்புக் காரணமாக டேவிட் பீரிஸ் சோலர் எனர்ஜினால் வாடிக்கையாளர்கள் இருக்கும் இடத்திற்கே அவற்றைக் கொண்டு செல்வதற்கும் விற்பனைக்குப் பின்னரான சேவையை வழங்க முடிகிறது.



மிகவும் சிறந்த சூரியப் படலங்களுடனேயே கம்பனி இணைந்து செயற்படுவதுடன் சூரியப் படலங்கள் மற்றும் அவற்றில் உள்ள வயர் கட்டமைப்புக்கு செயற்பாட்டுக்கமைய 25 வருட உத்தரவாதமும் நிறுவுதல் மற்றும் வயரிங் மேற்கொள்ளலுக்கு 10 வருட உத்தரவாதமும், இன்வேட்டர் பற்றரி மற்றும் படலம் என்பவற்றுக்கு முறையே 10 வருட, 5 வருட மற்றும் 12 வருட உத்தரவாதங்களும் வழங்கப்படுகின்றன. இதற்கும் மேலதிகமாக இரண்டு வருடங்களுக்கு அனைத்துக் கட்டமைப்புக்குமான பராமரிப்பு மற்றும் சேர்விஸ் என்பன இலவசமாக வழங்கப்படுவதுடன் நிறுவப்பட்டுள்ள சூரியப்படல கட்டமைப்புக்கான முதல் வருட காப்புறுதித் தவணைக் கட்டணம் இலவசமாகும்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த டேவிட் பீரிஸ் சோலர் எனர்ஜி நிறுவனத்தின் பிரதம பொறியியலாளரும் உதவிப் பொது முகாமையாளருமான சாந்த சஞ்ஜீவ குறிப்பிடுகையில், “நாம் வழங்கும் தீர்வுகள் டேவிட் பீரிஸ் குழுமம் கொண்டுள்ள நம்பிக்கை, நன்மதிப்பு, சிறந்த உபகரணங்கள் மற்றும் சிறந்த தொழில்நுட்பத்தின் ஊடாக வலுப்படுத்தப்படுகின்றன. எங்களைப் பொறுத்தவரை இது வெறுமனே சூரியப் படலக் கட்டமைப்பை நிறுவுவது அல்ல. தனிப்பட்ட வாடிக்கையாளரின் சரியான, குறிப்பிட்ட தேவைகளைப் புரிந்துகொண்டு ஆரம்ப ஆலோசனை முதல் சூரியப்படலத்தை நிறுவுதல் அதற்குப் பின்னரான ஒத்துழைப்பு போன்ற இறுதிவரையான நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். நிறுவனத்தால் நிறுவப்பட்ட அனைத்து அமைப்புகளும் மையத்திலிருந்து கண்காணிக்கப்படுவதுடன் ஏதேனும் சிக்கல் கண்டறியப்பட்டால் வாடிக்கையாளருக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டு அதைச் சரிசெய்ய தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்படும்” - என்றார்.

மேலதிக தகவல்களுக்கு பிரசன்னா (0773675508) அல்லது வருண (0773083321) ஆகியோரைத் தொடர்புகொள்ளவும்.

# டயலொக் தனது Star Rewards Loyalty அங்கத்தவர்களுக்கான அற்புதமான வெகுமதிகள் மற்றும் சலுகைகளை அறிவித்துள்ளது

இலங்கையின் முதன்மை தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. வழங்கும் Dialog Star Rewards நிகழ்ச்சித் திட்டமானது, smartphones> Dialog TV,Dialog Home Broadband இணைப்புகள், பங்குதார வணிகர்களிடம் கிடைக்கும் பிரத்தியேக சலுகைகள் மற்றும் பலவற்றில் சிறப்பு தள்ளுபடிகள் உட்பட பல அனுகூலங்களை அதிகரித்துள்ளது.

Dialog Star Rewards Loyalty திட்டம் டயலொக் வாடிக்கையாளர்களுக்கே பிரத்தியேகமானது, அதன்படி, ரீலோட்கள் மற்றும் செலுத்தப்பட்ட மாதாந்த பில் கொடுப்பனவுகள் மற்றும் வாடிக்கையாளர் Dialog இல் இருந்த கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட Tier புள்ளிகளின் அடிப்படையிலேயே மேற்படி வெகுமதிகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. Star Rewards என்பது டயலொக்கின் விரிவான வலையமைப்பின் ஓர் அங்கமாக இருக்கும் அதேவேளை, அதன் நாடளாவிய ரீதியிலான கூட்டு வணிகர்களுடன் இணைந்து Star Rewards உறுப்பினர்களுக்கு சிறந்த Loyalty சலுகைகளை வழங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

இந்த வருடம் வாடிக்கையாளர்கள் Dialog Lesi Pay மூலம் மலிவு விலையிலான மாதாந்த தவணைமுறை திட்டங்களுக்கான அணுகலுடன் smartphones, Dialog Home Broadband மற்றும் Dialog Television இணைப்புகளில் 15% வரை விலைக்கழிவையும் அனுபவிக்க முடியும். மேலும், வாடிக்கையாளர்கள் Nawaloka Medicare, Heritance Kandalama, Heritance Ahungalla, Thuryaa Kalutara, Amethyst Resort, Earls Regency, Imtiyaz Designers, Greenmart supermarkets மற்றும் பல வணிக கூட்டாளர்களிடம் 50% வரை தள்ளுபடியைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், Dialog Star Rewards திட்டமானது வாடிக்கையாளர்களுக்கு வருடம் முழுவதும் பலதரப்பட்ட அனுகூலங்களை வழங்குவதுடன், அவர்களின் வெகுமதி அனுபவத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




உங்கள் Dialog Star Rewards Loyalty நிலையைச் சரிபார்த்து உங்களுக்கான வெகுமதிகள் மற்றும் சலுகைகளைப் பெற, MyDialog App இல் உள்ள Star Loyalty பகுதியைப் பார்வையிடவும், dialog.lk ஐ பார்வையிடவும் அல்லது #141#க்கு டயல் செய்யவும்.

# உலகின் மிகவும் பெறுமதிவாய்ந்த முதல் 10 டயர் வர்த்தகநாமங்களில் ஒன்றான உடன் மகத்தான புதிய பயணத்தின் ஆரம்பம் – தற்போது இலங்கையில் கிடைக்கின்றது!

Akvora International (Pvt) Ltd. நிறுவனம், இலங்கையில் Giti டயரின் புதிய விநியோகஸ்தராக மாறியுள்ளதை பெருமையுடன் அறிவித்துள்ளதுடன் இந்த உலகத் தரம் வாய்ந்த டயர் வர்த்தக நாமத்தை இலங்கைச் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது. Giti டயர் உலகளாவிய ரீதியில் பெறுமதிவாய்ந்த முதல் 10 டயர் வர்த்தக நாமங்களில் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கைச் சந்தைக்கு பரந்த அளவிலான உயர்தர தயாரிப்புகள் மற்றும் புத்தாக்கமான தொழில்நுட்பங்களைக் கொண்டுவருகிறது. Akvora International என்பது இலங்கையில் குளிரூட்டித் தொகுதிகளை இறக்குமதி செய்து விநியோகிப்பதில் முன்னிலை வகித்து வருகின்ற ஒரு நிறுவனமான Akvora (Pvt) Ltd. இன் முழுமையான உரிமையாண்மையின் கீழான துணை நிறுவனமாகும். எவ்வாறாயினும், டயர்கள் தொடர்பான அதன் வணிக முயற்சி புதியது என்றாலும் Akvora International ஆனது மோட்டார் வாகனத் துறையில் 100 ஆண்டுகளுக்கும் மேலான கூட்டு அனுபவத்தைக் கொண்ட திறமையான தொழில்சார் நிபுணர்களின் அணியால் வழிநடத்தப்படுகிறது.

இலங்கையில் Giti டயர் அறிமுகம் செய்யப்படுவது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டு அதனை முன்னிட்டு நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாடு மற்றும் நிகழ்வில் அது வெளியிடப்பட்டது. செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியவர்களில் Giti டயர் குழுமத்தின் ஆசியான், அவுஸ்திரேலியா மற்றும் இலங்கைக்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரான நிக்கோ மற்றும் Giti டயர் குழுமத்தின் ஆசியா,இலத்தீன் அமெரிக்கா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் ஓசானியா ஆகியவற்றுக்கான சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரியான ஷிரூ சியா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்த இரண்டு உயர்மட்ட அதிகாரிகளின் பிரசன்னம், Giti டயர் இலங்கைச் சந்தையில் காண்பிக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டியதுடன் இந்த வர்த்தகநாமம் இலங்கை மீது கொண்டுள்ள குறிக்கோள் பற்றிய உயிரோட்டமான கலந்துரையாடல் மற்றும் நட்புரீதியான கருத்துப் பரிமாற்றங்களுக்கான வாய்ப்பை வழங்கியது.

சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்ட Giti டயர் குழுமம் 1951 ஆம் ஆண்டு முதல் டயர் வணிகத்தில் ஒரு செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இன்று இது உலகளவில் மிகப்பெரிய டயர் நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்வதுடன், 130 க்கும் மேற்பட்ட நாடுகளில் முக்கிய அசல் உபகரண வாகன உற்பத்தியாளர்கள், மோட்டார் வாகன பராமரிப்பு சேவை விற்பனை மையங்கள், மோட்டார் வாகன விளையாட்டு அணிகள், டயர் முகவர்கள் மற்றும் நுகர்வோருக்கு சேவைகளை வழங்கி வருகின்றது. தரம் மீது இந்த வர்த்தகநாமம் கொண்டுள்ள அர்ப்பணிப்பானது.




General Motors, VW, Renault மற்றும் Peugeot போன்ற முன்னணி வாகன உற்பத்தியாளர்களுடனான அதன் வலுவான கூட்டாண்மைக்கு வழிவகுத்துள்ளதுடன் Giti டயரை விவேகமான வாகன ஓட்டுநர்களுக்கு விருப்பமான தெரிவாகவும் ஆக்கியுள்ளது.

Giti டயர் ஆனது, டயர் உற்பத்தியில் புத்தாக்கம் மற்றும் மேன்மையில் உறுதிபூண்டுள்ளது. நான்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையங்கள் மற்றும் ஒரு சோதனை மையத்துடன் உலகளவில் இந்நிறுவனம் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் அதிநவீன உபகரணங்களில் முதலீடு செய்து தொடர்ந்து சொகுசான மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்கிறது. இந்த கவனம் Giti டயரை 260 க்கும் மேற்பட்ட பயணிகள் கார் வகைகள் மற்றும் 375 டிரக் மற்றும் பஸ் வகைகளுக்கு விருப்பமான அசல் உபகரண வழங்குநராகத் திகழ உதவுவதுடன் அதன் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய விரிவான அளவிலான தெரிவுகளை வழங்கச் செய்கிறது.

130 நாடுகளில் 70,000க்கும் மேற்பட்ட விற்பனை மையங்களுடன், உலகெங்கிலும் உள்ள ஓட்டுநர்களுக்கு நம்பகமான மற்றும் விசுவாசமான தெரிவாக Giti டயர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் அமெரிக்கா, இந்தோனேஷியா மற்றும் சீனாவில் ஐந்து உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி ஆலைகளை இயக்கி வருவதுடன் சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யும் உயர்தர டயர்களின் உற்பத்தியை உறுதி செய்கிறது. நிகரற்ற வாடிக்கையாளர் உதவிச் சேவையை உறுதிசெய்ய சிங்கப்பூர், இந்தோனேஷியா, மலேசியா, சீனா, அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் துபாய் உட்பட உலகெங்கிலும் 10 அலுவலகங்களை Giti டயர் இயக்கி வருகின்றது.

இந்த வர்த்தகநாமத்தின் டிஜிட்டல் மீதான கவனம் அதை தொழில்துறையில் தனித்துவத்துடன் திகழச்செய்வதுடன் Giti டயர் டிஜிட்டல் முறையில் முன்னெடுக்கப்படும் டயர் வடிவமைப்பு கருவிகள் மற்றும் செயல்திறன் பரீட்சகர்களைப் பயன்படுத்துகிறது. மேலும், புதிய சிந்தனைகளை முன்னோக்கி கொண்டு வருவதற்கு அதிநவீன தொழில்நுட்பங்களின் அனுகூலத்தைப் பயன்படுத்துகிறது. இந்த டிஜிட்டல் அணுகுமுறையானது ஓட்டுநர் அனுபவத்தை மேம்படுத்துவதுடன் இலங்கையில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு வீதி மற்றும் நிலப்பரப்பு நிலைமைகள் உட்பட பல்வேறு பிராந்தியங்களில் உகந்த செயல்திறனை உறுதி செய்கிறது.

இலங்கையில் Giti டயரின் அறிமுகமானது அதன் இரண்டு புதிய தொழில்நுட்பங்களான Giti Magic Sound மற்றும் Giti Seal ஆகியவற்றை உள்ளூர் சந்தைக்குக் கொண்டுவருகிறது. Giti Magic Sound என்பது நிலையான ஒலி உறிஞ்சுதல் மற்றும் இரைச்சல் குறைப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் ஒரு புத்தாக்கமான தீர்வாகும். பல்வேறு வீதிப் பரப்புகளில் சோதிக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பம் ஒலி அளவுகளில் குறிப்பிடத்தக்க குறைப்பை நிரூபித்துள்ளதுடன் அவற்றை 2 முதல் 4 டெசிபல்கள் வரை குறைத்து அமைதியான மற்றும் சௌகரியமான அனுபவத்திற்கு இடமளிக்கிறது. இதற்கிடையில், Giti Seal அதன் உயர்-பாகுத்தன்மை முத்திரை குத்த பயன்படும் மெழுகு போன்ற ஒரு வகை பொருள் மூலம் விரைவான நிரப்புத் திறன்களை வழங்குகிறது. Giti டயரில் காற்றுப் போகும் துவாரம் ஏற்பட்டால் அது விரைவாக செருகப்பட்டு டயர் தங்குதடையின்றி பாவனைக்குத் திரும்புவதை உறுதிசெய்கிறது. இது அதிகபட்ச சௌகரியம் மற்றும் நம்பகத்தன்மைக்கு இடமளிக்கிறது.

Akvora International (Pvt) Ltd. என்பது இலங்கையில் வாகன தயாரிப்புகளின் நன்மதிப்பிற்குரிய விநியோகஸ்தராகும். உயர்தர தயாரிப்புகள் மற்றும் தலைசிறந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதில் கவனம் செலுத்தும் இந்நிறுவனம் இலங்கை மோட்டார் வாகன சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உறுதியாக உள்ளது.

# சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான ஏற்றுமதி மையங்களை ஸ்தாபிக்கும் மக்கள் வங்கி

## முதலாவது 'ஏற்றுமதி மையம்' மக்கள் வங்கியின் நுகேகொடை கிளையில் திறக்கப்பட்டுள்ளது

இலங்கையில் வங்கி மற்றும் நிதிச் சேவைத் துறையில் முன்னணி அரச வங்கியாக உள்ள மக்கள் வங்கி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறை ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏற்றுமதி மையம் என்ற கோட்பாட்டை அறிமுகப்படுத்தியதன் மூலம், தனது சேவைகளை வழங்குவதில் அண்மையில் மேலும் ஒரு புத்தாக்கமான மேம்பாட்டைச் செய்துள்ளது.

அதன்படி, வங்கியின் முதலாவது 'ஏற்றுமதி மையம்' 18.07.2023 அன்று மக்கள் வங்கியின் நுகேகொடை கிளையில் திறந்து வைக்கப்பட்டது. முதற்கட்டமாக, நாடு முழுவதும் உள்ள ஏழு பிராந்தியங்களில் உள்ள ஏழு கிளைகளில் இந்தச் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கப்படவுள்ளது.




ஏற்றுமதி மையத்தை திறந்து வைத்து உரையாற்றிய மக்கள் வங்கியின் தலைவரான சுஜீவ ராஜபக்ஷ, "சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் தொழில் வாய்ப்புகளை வழங்குதல், புத்தாக்கங்களை உருவாக்குதல் மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதன் மூலம் எமது நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் இலங்கையில் 75% க்கும் அதிகமான நிறுவனங்களை உள்ளடக்கியதுடன் மற்றும் எங்கள் ஏற்றுமதியில் 20% க்கும் அதிகமான பங்களிப்பை வழங்குகிறது. அத்துடன், 45% வேலைவாய்ப்பையும் எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% பங்களிப்பையும் வழங்குகின்றன. நாம் ஓர் அரசாங்க வங்கியாக, எமது தொழில்முயற்சியாளர்களின் பல்வேறு தேவைகளைப் புரிந்து கொண்டுள்ளோம், மேலும் இந்தப் புதுமையான கோட்பாட்டின் மூலம் இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளை வலுவூட்டுவதே எமது நோக்கமாகும்," - என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியும்/பொது முகாமையாளருமான கிளைவ் பொன்சேகா இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், "வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான சேவையை வழங்கும் நோக்கத்துடன் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு அனுசரணையளிப்பதற்காக ஏற்றுமதி மையங்களில் உள்ள எமது பணியாளர்கள் நன்கு பயிற்சியளிக்கப்பட்டு, நிபுணத்துவம் மற்றும் அறிவை வழங்கத் தயாராக உள்ளனர். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறையில் ஈட்டப்படும் வெற்றிகள், அதிகளவில் உள்நாட்டு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்பதுடன், மற்றும் நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் நிலைபேண்தகு வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்களை ஏற்படுத்தும்" - என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா, பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தக நிதி) ஏ.எஸ்.எம்.வி. குமாரசிறி, பிரதிப் பொது முகாமையாளர் (தொழில் துறை வங்கிச்சேவை) விக்கிரம நாராயண, பிரதிப் பொது முகாமையாளர் (மார்க்க முகாமைத்துவம்) ரி.எம்.டபிள்யூ. சந்திரகுமார, சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி என்.எச். விஜயவர்தன மற்றும் மக்கள் வங்கியின் நிறுவன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ உறுப்பினர்கள், வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோர் நுகேகொடையில் இந்த முதல் ஏற்றுமதி மையத்தின் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டனர்.

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியானது, ரூபா 3.0 டிரில்லியனுக்கும் அதிகமான திரட்டிய சொத்துகளுடன் நாட்டின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனராகும். தற்போது, வங்கி நாடு முழுவதும் 745 கிளைகள் மற்றும் சேவை மையங்களைக் கொண்டுள்ளதுடன் 14.7 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ளது.

ஏற்றுமதி மையங்கள் விசேட வீதங்கள், வங்கிச்சேவை வசதிகள், உத்தரவாத வசதிகள், ஆலோசனை மற்றும் அறிவுரை, துணைச் சேவைகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் மார்க்கங்கள் (நிறுவன இணைய வங்கிச்சேவை) உள்ளிட்ட ஒட்டுமொத்த நிதியியல் தீர்வுகளை வழங்குகின்றன.

# விருது வழங்கும் விழா





மிகவும் எதிர்பார்க்கப்பட்ட NCUK மற்றும் APIIT Sri Lanka விருது வழங்கும் விழா ஜூலை 12, 2023 அன்று Monarch Imperial இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் NCUK இன் மரியா மக்கண்ணா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அவர் NCUK மற்றும் APIIT Sri Lanka வணிகம், சட்டம் மற்றும் கணிப்பியல் ஆகியவற்றில் வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களின் சிறந்த சாதனைகளைக் கொண்டாடும் இந்நிகழ்வில் இணைந்து கொண்டார்.

மாணவர்களை இளங்கலைக் கல்வியை மாத்திரமன்றி, வாழ்வாதாரத்துக்கும் ஏற்ற வகையில், APIIT Sri Lanka கணினி, வணிகம் மற்றும் சட்டம் ஆகிய மூன்று பிரிவுகளில் கல்வியை வழங்குகிறது. APIIT இல் வழங்கப்படும் UK, Staffordshire University இலிருந்து அந்தந்த பட்டப்படிப்புகளின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

APIITவழங்கும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தகைமைகளைக் கொண்ட மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் படிப்பைத் தொடர விரும்பாத அல்லது போதிய க.பொ.த. உயர்தர தகைமைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ஒரு பெறுமதியான வாய்ப்பாகும். ஒரு பொதுவான இலக்கை மனதில் கொண்டு APIIT Sri Lanka இல் வழங்கப்படும் Staffordshire பல்கலைக்கழக பட்டப்படிப்புகளில் நுழைவதற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துகின்றன. உயர்கல்விக்கு மாற்று வழியை வழங்குவதன் மூலம் APIIT பலதரப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த துறையில் தங்கள் கல்வி அபிலாஷைகளைத் தொடர வழிவகுத்துள்ளது.

APIIT ஆனது NCUK IFY ஐ வழங்கும் முதல் இலங்கை நிறுவனமாகும். இது இரண்டாம் நிலையிலிருந்து மூன்றாம் நிலைக் கல்விக்கு மாறுவதை எளிதாக்கும் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாகும். இது கல்வி வாய்ப்புகள் மற்றும் உலகளாவிய NCUK கூட்டாளர் பல்கலைக்கழகங்களுக்கு ஒரு பாதையை வழங்குகிறது. இது பரந்த அளவிலான பட்டப்படிப்புகளை வழங்குகிறது. NCUK பல்கலைக்கழகங்களுடன் உருவாக்கப்பட்ட பாடத்திட்டம் உயர் தரத்தில் கவனம் செலுத்துகிறது மற்றும் பல்கலைக்கழக வெற்றிக்காக மாணவர்களை மொழி மற்றும் படிப்புத் திறன்களுடன் சித்தப்படுத்துகிறது. கடந்த ஆண்டு 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் அடிப்படைப் படிப்பை வெற்றிகரமாக முடித்த பின்னர் அவர்கள் விரும்பும் பல்கலைக்கழகங்களில் சேர்ந்தனர்.

விழாவின் போது, APIIT தலைவர், பட்டதாரிகள் மற்றும் அவர்களின் பெருமைமிக்க பெற்றோருக்கு உரை நிகழ்த்த மேடை ஏறினார். APIITயில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு அவர் தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தார்.APIIT கல்விசார் சிறந்த கலாசாரத்தைத் தொடர்ந்து வளர்த்து வருவதால் இந்த விழா மாணவர்களுக்கு விதிவிலக்கான கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கு சான்றாக உள்ளது. தற்போது அறிவுத் திறன்கள் மற்றும் அவர்கள் தேர்ந்தெடுத்த துறைகளில் வெற்றி பெறுவதற்கான உறுதிப்பாடு ஆகியவற்றைக் கொண்ட திறமையான நபர்களுக்கு இது ஒரு நம்பிக்கைக்குரிய பயணத்தின் தொடக்கத்தைக் குறித்தது.

1999 இல் ஸ்தாபிக்கப்பட்ட APIIT Sri Lanka இலங்கையின் உயர் கல்வித் துறையில் அதன் பங்களிப்புக்காக நன்கு அறியப்பட்டதாகும். வணிகம், கணினி மற்றும் சட்டம் ஆகியவற்றில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளை நடத்துகிறது. இது பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகிறது. சுமார் 1000 மாணவர்களை வருடாந்தம் உள்வாங்குவதுடன் APIIT Sri Lanka இலங்கையில் பிரித்தானிய பட்டப்படிப்புகளை வழங்கும் மிகப்பெரிய நிறுவனமாக உள்ளதுடன் இலங்கையில் தனியார் உயர்கல்வியில் தரம் மற்றும் தரத்திற்கு ஓர் அளவுகோலை அமைத்துள்ளது.

# கடும் வரட்சியால் நீர்நிலைகள் வற்றி தேயிலைச் செய்கை பெரிதும் பாதிப்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி மாவட்டத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக நீர் நிலைகளில் நீர் வற்றி விவசாயம் மற்றும் தேயிலைச் செய்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தேயிலைச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் தேயிலைச் செடிகள் காய்ந்து வரண்டு காணப்படுவதனால் எதிர்வரும் காலங்களில் உற்பத்தி நடவடிக்கைகள் கூட பெரும் பாதிப்பை ஏற்படுத்துமெனவும் இவற்றில் தங்கி வாழும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தொழிலாளர்கள், தேயிலைக் கொழுந்து போக்குவரத்து மற்றும் விநியோகஸ்தர்கள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்புக்குட்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கையில் சிறு தேயிலைத் தோட் டங்கள் அதிகமாகக் காணப்படும் இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு ஏக்கர் முதல் 100 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களையுடைய தேயிலைச் செய்கையாளர்கள் பெருமளவில் காணப்ப டுகின்றனர். இரத்தினபுரி, பலாங்கொடை , இறக்குவானை, காவத்தை, பெல்மதுளை, நிவித்திகல, கலவான மற்றும் அயகம போன்ற பிரதேசங்களில் சிறு தேயிலைத் தோட்டங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இவற்றில் பணியாற்றும் கணிசமான எண்ணிக்கையானோருக்கு தற்போது இரண்டொரு நாட்களே வேலை கிடைப்பதால் இவர்கள் மாற்றுத் தொழில்களை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வரட்சியால் இம்மக்களின் ஜீவனோபாயம் நாளுக்கு நாள் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com



உக்குவளை, குரீவெலயைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.பரீன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நான்கு வருடம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பை(Master of Business Administration General Managment) முடித்துள்ளதுடன் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மூன்று வருடம் பட்டய கணக்காளர் பாடநெறியையும் பூர்த்தி செய்து தகுதிபெற்று வெளியேறி இலங்கை மட்டுமன்றி, இந்தியா, மலேசிய நாடுகளிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகிறார். அதேவேளை, தலைமைத்துவ வழிகாட்டல் நிகழ்ச்சிகளையும் இவர் அவ்வப்போது நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (படம்:ஜலீல்)

# நீண்டநேரம் வரிசையில் காத்து நின்றவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

ராமு தனராஜா

பதுளை மாவட்டம், எல்ல பிரதேச செயலகத்தில் சேவை பெறச் சென்ற நபர் நீண்ட நேரம் வரிசையில் காத்துநின்ற நிலையில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

நமுனுகுல , தென்னக்கும்புர பகுதியைச் சேர்ந்த ராமையா குழந்தைவேலு (வயது 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கான விண்ணப்பப்படிவம் பெறுவதற்காக பிரதேச செயலகத்தின் முன்னால் வரிசையில் நீண்ட நேரம் காத்திருந்தபோதே மயங்கி விழுந்து உயிரிழந்ததாக அங்கு வரிசையில் நின்ற சிலர் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வன ஜீவராசிகள் வனவள அபிவிருத்தி பதில் அமைச்சரானார் ரோஹண திசாநாயக்க

கண்டி நிருபர்

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க வன ஜீவராசிகள் மற்றும் வனவள அபிவிருத்தி பதில் அமைச்சராக வியாழக்கிழமை (27)நியமிக்கட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.



வன ஜீவராசிகள் மற்றும் வனவள அபிவிருத்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பும் வரை பதில் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# "21 ஆம் நூற்றாண்டில் ஊடகம்" ஊடகக் கருத்தரங்கு நாளை

எம்.எஸ்.எம்.ஸாகிர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள "21 ஆம் நூற்றாண்டில் ஊடகம்" எனும் தொனிப்பொருளிலான ஊடகக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை(29) மாவனல்லை பதுரிய்யா மத்திய கல்லூரியில் நடைபெறும்.

முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், பதுரிய்யா மத்திய கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ. ரஹ்மான் ஆகியோரின் இணைத் தலைமையில் இரு அமர்வுகளாக நடைபெறும் இக்கருத்தரங்கில் கலாநிதி எம்.சி.ரஸ்மின், தாஹா முஸம்மில், ஜாவித் முனவ்வர், அஷ்ரப் ஏ.சமட் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

பதுரிய்யா மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இக்கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் முஹம்மத் ஆரிபுல் இஸ்லாம் பிரதம அதிதியாகவும் பேராதனைப் பல்கலைக்கழக இஸ்லாமிய அரபு கற்கைத் துறையின் முன்னாள் தலைவர் எம்.ஐ.எம்.அமீன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வர்.

SLMMF

இக்கருத்தரங்கானது மாணவர்களுக்கென தனியாகவும் ஊடக விரிவுரையாளர்கள் மற்றும் கேகாலை மாவட்ட முஸ்லிம் மீடியா போர அங்கத்தவர்கள் ஆகியோருக்கு வேறாகவும் என இரு அமர்வுகளாக நடைபெறும் என மீடியா போரத்தின் கேகாலை மாவட்ட இணைப்பாளர் அமீர் ஹுஸைன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் போரத்தின் உப தலைவர் எம்.ஏ.எம்.நிலாம், பொருளாளர் எம்.எம். ஜெஸ்மின், கேகாலை மாவட்ட முன்னாள் இணைப்பாளர் ஆதில் அலி சப்ரி உட்பட பல ர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது சஞ்சாரம் கலைஞர் குழுவின் விசேட கலாசார நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளதாக கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தின் முக்கியஸ்தரான பாரா தாஹிர் தெரிவித்தார்.

# குளவிக்கொட்டுக்கு இலக்காகிய 5 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்



டி.சந்ரு, செ.திவாகரன்

குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஐந்து தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை (27) காலை இடம்பெற்றுள்ளது.

பேர்ஹாம் தோட்டத்தில் மரமொன்றிலிருந்த குளவிக்கூட்டை கழுகு ஒன்று கலைத்துள்ளது.இதனால் குளவிகள் கலைந்து ஆங்காங்கே நின்ற தொழிலாளர்களை கொட்டியுள்ளது. இச்சம்பவத்தில் ஐந்து தொழிலாளர்கள் காயமுற்ற நிலையில் சிகிச்சைக்காக லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# தற்போதைய கல்விமுறையில் மாற்றத்தை ஏற்படுத்துக!

## சிறீதரன் எம்.பி. வேண்டுகோள்

யாழ். நிருபர்



அரசாங்கம் தற்போதைய கல்விமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணம், புன்னாலைக் கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,மாணவர்களின் கல்வியில் ஐந்தாம் தர புலமைப்பரிசில், பதினோராம் தர பொதுப்பரீட்சை என்பன பொருத்தமற்ற கல்விக் கொள்கையாகும். இன்னமும் சரியான கல்விக் கொள்கைக்குள் அரசாங்கம் வரவில்லை. இதனை திருத்தியமைப்பதன் மூலமே சிறந்த எதிர்காலமுள்ள மாணவர்களை உருவாக்க முடியும் எனத் தெரிவித்தார்.

கல்லூரி முதல்வர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வலய கல்விப் பணிப்பாளர், அயல் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# சிறுபோக அறுவடை விழா கிளிநொச்சியில்



கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக அறுவடை விழா நேற்று வியாழக்கிழமை (27) பன்னங்கண்டி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சின்னக்காடு பகுதியில் நடைபெற்றது.

இதில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் துறைசார் திணைக்களங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## ஊர்காவற்றுறை - காரைநகர்

# படகுப்பாதை ஓட்டிக்கு விளக்கமறியல்

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை - காரைநகருக்கு இடையில் சேவையில் ஈடுபடும் படகுப்பாதை ஓட்டி மது போதையில் பாதையில் பயணித்தவர்களுடன் தகாத வார்த்தைகள் பேசி முரண்பட்டதுடன் அரச உத்தியோகத்தர் ஒருவரையும் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (25) பிற்பகல் ஊர்காவற்றுறையிலிருந்து காரைநகர் நோக்கி பயணித்த படகுப்பாதையில் கடமையிலிருந்தவர் மேலங்கி அணியாது, அரை நிர்வாணமாக மது போதையிலிருந்து கொண்டு பயணத்தில் இருந்த அரச ஊழியர்கள், பொதுமக்களுடன் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன் அரச ஊழியர்களை தகாத வார்த்தைகளால் பேசியதுடன் ஊழியர் ஒருவரையும் தாக்கியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயர் அதிகாரிகள் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸார் ஆகியோருக்கு செய்யப்பட்ட

முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்றுறை பொலிஸார் பாதை ஓட்டியை கைதுசெய்து, நேற்று முன்தினம் புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை நீதிமன்று அவரை 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# உயிரிழந்த மூதாட்டியின் உடலில் வெட்டுக்காயங்கள்; கொலையென உறுதி

யாழ்ப்பாணம், தென்மராட்சி, மட்டுவில் வடக்கில் வீட்டில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி கொலை செய்யப்பட்டுள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மூதாட்டி நேற்று முன்தினம் (26) காலையில் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

82 வயதுடைய தம்பையா சரோஜினி என்ற மூதாட்டியே இவ்வாறு சடலமாக மீக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், மூதாட்டி கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

அதனையடுத்து சாவகச்சேரி நீதவான் சடலத்தைப் பார்வையிட்டதோடு உடற்கூற்று பரிசோதனைக்காக சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், தலை மற்றும் கைகளில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாகவும் மூதாட்டி கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அச்சுவேலி சனசமூக நிலைய மரங்களுக்கு மண்ணெண்ணெய் ஊற்றிய விஷமிகள்

யாழ். நிருபர்



யாழ்ப்பாணம், அச்சுவேலி, செல்வநாயகபுரம் வீதியிலுள்ள வளர்மதி சனசமூக நிலைய வளாகத்திலுள்ள பூச்செடிகள், பயன்தரு மரங்களுக்கு இனந்தெரியாத நபர்கள் மண்ணெண்ணெய் ஊற்றும் ஈனச்செயல் அந்தப் பகுதியிலிருந்த சிசிரிவி கெமராவில் பதிவாகியுள்ளது.முகங்களை மறைத்துக்கொண்டு பெரல் ஒன்றில் மண்ணெண்ணெய் எடுத்து இவர்கள் இந்தக் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கெமராவில் பதிவாகிய இரண்டு நபர்களும் பிரதேச மக்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.இந்த இரண்டு சந்தேக நபர்களையும் கைதுசெய்வதற்குரிய விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்.

# சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வுகள்







சாவகச்சேரி நிருபர்



சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வுகள் நேற்று (27) வியாழக்கிழமை காலை இடம்பெற்றன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. ஏ. சனத் நிசாந்த கலந்துகொண்டு பரிசோதனை நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்புப் பரிசோதனை, பொலிஸ் நிலைய வாகனப் பரிசோதனை மற்றும் விசேட வகுப்பு ஆகியனவும் இடம்பெற்றிருந்தன.

## விளையாட்டுத் துளிகள்

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சவுத் ஷகீல் தொடர்ச்சியாக 7 முறை அரைச்சதம் விளாசி உலக சாதனை படைத்துள்ளார். இலங்கை அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஷகீல் அரைச்சதம் விளாசியதன் மூலம் 146 ஆண்டுகால கிரிக்கெட்டில் புதிய வரலாறு படைத்துள்ளார். அதாவது, தொடர்ச்சியாக 7 டெஸ்ட் போட்டிகளில் 50 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த முதல் நபர் இவர் தான்.

★★★★★★★★★★

ரி20 சர்வதேச கிரிக்கெட்டில் 8 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தி ரி20 போட்டிகளில் அதிசிறந்த பந்துவீச்சு பிரதியை பதிவுசெய்த வீரராக மலேசியா வீரர் ஷியஸ்ருல் இட்ருஸ் புதிய உலக சாதனை படைத்துள்ளார். ஒரு போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர்கள் பட்டியலில் நைஜீரியாவின் பீட்டர் அஹோ (6/5), இந்தியாவின் தீபக் சஹார் (6/7), உகண்டாவின் தினேஷ் நக்ரனி (6/6), அஜந்த மெண்டிஸ் (6/8) ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




# இலங்கையை வெள்ளையடிப்பு செய்து டெஸ்ட் தொடரை கைப்பற்றிய பாகிஸ்தான்

இலங்கை அணியுடனான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களினால் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணி, இலங்கை அணியுடன் மிகப்பெரிய டெஸ்ட் வெற்றியைப் பதிவு செய்ததுடன் தொடரையும் 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

முதல் ஆட்டத்தில் பாக். அணி 4 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டிய நிலையில், இரண்டாவதும் இறுதியுமான போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதல் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தங்களது முதல் இன்னிங்ஸுக்காக வெறும் 166 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாக். அணி நேற்று போட்டியின் நான்காவது நாள் காலையில் 5 விக்கெட் இழப்புக்கு 576 ஓட்டங்களைக் குவித்திருந்த நிலையில், இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது. 410 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி வெறும் 188 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து படுதோல்வியைச் சந்தித்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக இரட்டைச்சதம் விளாசிய பாக். வீரர் அப்துல்லா ஷபீக் தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக பாக். அணியின் ஆகா சல்மான் தெரிவானார்.

# இந்தியா-பாக். மோதும் திகதியில் மாற்றம்?




ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான போட்டி நடைபெறும் திகதியில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் வெளியான உலகக்கிண்ண அட்டவணையின்படி இந்தியா - பாகிஸ்தான் அணிகள் தங்கள் முதல் லீக் போட்டியில் அஹமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் வரும் ஒக்டோபர் 15ஆம் திகதி மோதவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அகமதாபாத் மைதானத்தில் 90 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அமரலாம் என்பதால், வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் அங்குள்ள ஹோட்டல்களில் அறைகளை முன்பதிவு செய்து, பயண ஏற்பாட்டையும் மேற்கொண்டனர்.

ஆனால், தற்போது வெளியாகியுள்ள தகவலின்படி போட்டியின் திகதியில் மாற்றம் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் நவராத்திரி பண்டிகையின் முதல் நாள் என்பதாலும், குறிப்பாக, குஜராத்தில் இரவு முழுவதும் கர்பா நடனத்துடன் கொண்டாட்டம் இருக்கும். எனவே, பாதுகாப்புக் காரணங்களுக்காக ஆட்டத்தை வேறு திகதிக்கு மாற்றக் கூறி பி.சி.சி.ஐ.க்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால், மறு திட்டமிடல் நடந்தால் ஹோட்டல் முன்பதிவு பெருமளவில் ரத்துச் செய்யப்பட வாய்ப்புள்ளது. இந்தியா-பாகிஸ்தான் இடையேயான போட்டி ஒக்டோபர் 14ஆம் திகதி மாற்றியமைக்கப்படும் என தற்போது தகவல்கள் தெரிவிக்கின்றன.



களுத்துறை வலய பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் களமிறங்கவுள்ள பாணந்துறை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை அணி, அதிபர் எம்.ரிஸான் மற்றும் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் சிஹான் மஹ்ரூப், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஏ.எஸ்.எம்.சக்ரி ஆகியோரைப் படத்தில் காணலாம். (படம் - எம்.எஸ்.எம். முன்தஸிர்)

# கல்முனை மிஸ்பாஹியன்ஸ் கேன்க் பேங்க் மற்றும் 2014 டீம் 98 அணிகள் சம்பியனாக தெரிவு





கல்முனை நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 64 வருடங்களைக் கடந்த முன்னணி பாடசாலையான கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் கல்விகற்ற பழைய மாணவர்களை பாடசாலையோடு மீண்டும் ஒன்றிணைக்கும் முகமாக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு மற்றும் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரசாக் தலைமையில் பிரதி அதிபர் ஐ.எல்.எம். ஜின்னாவின் நெறிப்படுத்தலில் கடந்த வாரம் பாடசாலை மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

அல் - மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் கற்பித்த மறைந்த ஆசிரியர்களான மர்ஹூம் எம்.எஸ்.எம். ஷர்மில் மற்றும் ஏ. ஹபீப் முஹம்மட் ஆகியோரின் ஞாபகார்த்தமாக குறித்த பாடசாலையின் பழைய மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியின் எம்.எஸ்.எம்.சர்மில் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சம்பியனாக மிஸ்பாஹியன்ஸ் கேன்க் பேங்க் அணியும், ஏ.ஹபீப் முஹம்மட் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சம்பியனாக 2014 டீம் 98 அணியும் தெரிவாகின.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரபல தொழிலதிபரும் சமுக செயற்பாட்டாளருமான கல்முனை அப்துல்லாஹ் ஆடையகத்தின் முகாமைத்துவப் பணிப்பளர் கே.எம்.ஷாபி ஹாதிம், கௌரவ அதிதியாக நிந்தவூர் பிரதேச செயலக பிரதம கணக்காளரும் பாடசாலையின் பழைய மாணவியுமான எஸ்.எல்.எவ்.சாஜிதா, விசேட அதிதிகளாக மர்ஹூம் எம்.எஸ்.எம். ஷர்மில் ஆசிரியரின் மகன் எம்.எஸ்.எம்.அம்ஸில் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், பாடசாலையின் ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வலைப்பந்து உலகக்கிண்ணத் தொடர் இன்று கேப்டவுனில் ஆரம்பம் இலங்கை அணிக்கு அனுசரணை வழங்கும் டயலொக்

டயலொக் அனுசரணையிலான இலங்கை தேசிய வலைப்பந்து அணி, 2023ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நடைபெறும் உலகக்கிண்ண வலைப்பந்து போட்டியில் பங்கேற்கவுள்ளது. இந்தத் தொடர் இன்று முதல் ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

கடந்த ஆண்டு ஆசிய சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை, இம்முறை உலகம் முழுவதும் உள்ள வலிமைமிக்க அணிகளுக்கு எதிராக உலக அரங்கில் தங்கள் திறமையை வெளிப்படுத்த தயார் நிலையில் உள்ளதாகக் கருதப்படுகின்றது. சி பிரிவில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி, ஜமைக்கா, போட்டியை நடத்துகின்ற தென்னாபிரிக்கா மற்றும் வேல்ஸ் போன்ற பிரபல அணிகளிடமிருந்து கடும் போட்டியை எதிர்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அணியின் தலைவியான கயாஞ்சலி அமரவங்ச மற்றும் உப தலைவியான துலங்கி வன்னிதிலக ஆகியோரின் வழி நடத்தலிலான இலங்கை அணியினர் ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளில் ஈட்டியிருந்த வெற்றி உத்வேகத்துடன் இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகளிலும் போட்டியிடுகின்றமை அநேகரின் கவனத்திற்குரிய ஓர் அம்சமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



1963 ஆம் ஆண்டு ஈஸ்ட்போர்னில் நடைபெற்ற போட்டிகளின்போது சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி இலங்கை அணி 9ஆவது இடத்தைப் பிடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நான்கு வருடங்களுக்கு முன்னர் லிவர்பூலில் நடைபெற்ற போட்டிகளில் 15ஆவது இடத்தைப் பிடித்திருந்த இலங்கை அணி, சவால்களை முறியடிப்பதையும் தாண்டி இம்முறை உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்டு உலக அரங்கில் முத்திரை பதிப்பதில் கவனம் செலுத்துகிறது.

எவ்வாறாயினும், உலகின் உயரமான வீராங்கனையாகக் கருதப்படும் தர்ஜினி சிவலிங்கம் மற்றும் சதுரங்கி ஜயசூரிய, துலங்கி வன்னிதிலக, கயாஞ்சலி அமரவன்ச, கயானி திசாநாயக்க மற்றும் சேமினி அல்விஸ் போன்ற வீராங்கனைகளைக் கொண்டுள்ள இலங்கை அணியானது சிறப்பான திறமைகளைக் கொண்டுள்ளது எனலாம். இத்தகைய திறமையான வீராங்கனைகள் தமது உயரம் மற்றும் அனுபவம் ஆகியவற்றைக் கொண்டுள்ளமை மூலம் எந்தவொரு பலம் வாய்ந்த அணிக்கும் எதிராகப் போராடும் திறனை இலங்கை அணி கொண்டுள்ளமை அதன் வெற்றிக்கான நம்பிக்கையை பிரகாசப்படுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.




# மாவனெல்லையில் மாபெரும் கிரிக்கெட் சுற்றுத்தொடர்

அமீர் ஹுசைன்

மாவனெல்லை பூட்டாவை பிளஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பூட்டாவை பிரீமியர் லீக் 2023 கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரை மாவனல்லை மயூரபாத தேசிய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இந்தக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் மாவனல்லை பூட்டாவை கிங்ஸ், ரைடர்ஸ், ஸ்டார்ஸ், ரோயல், ஸ்மார்சஸ் மற்றும் பூட்டாவை ஸ்ரைகர்ஸ் ஆகிய 06 அணிகள் பங்குபற்றுகின்றன.

ஐந்தாவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறித்த தொடரில் பிளஸ் விளையாட்டுக் கழகத்தின் மௌலவி நஜாத், மொஹமட் ரினாஸ், அப்கர், மொஹமட் நவீட், அனஸ், மொஹமட் இம்தியாஸ் ஆகியோர் ஏற்பாட்டாளர்களாக கடமையாற்றுகின்றனர்.

# இலங்கை அணிக்கு நிபந்தனைகளின் கீழ் ஆட வாய்ப்பு

சர்வதேச உதைபந்து பேரவையானது இலங்கை உதைபந்து அணிக்கு தடை விதித்த நிலையில், இலங்கை அணிக்கு அடுத்த உலகக் கிண்ணத்திற்கான தகுதிகாண் தொடரில் விளையாடுவதற்கான வாய்ப்பு கடுமையான நிபந்தனைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

பீபாவின் தடையினால் இலங்கை தேசிய அணி மற்றும் இளையோர் உதைபந்து அணிகள் அண்மையில் நிறைவடைந்த தெற்காசிய சம்பியன்ஷிப் உள்ளிட்ட பல சர்வதேச தொடர்களில் விளையாடும் வாய்ப்பை இழந்தன. இந்தத் தடை நீடித்தால் இலங்கை அணிக்கு அடுத்த உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளிலும் விளையாட முடியாத நிலை ஏற்படும் சாத்தியம் இருந்தது.

இவ்வாறான ஒரு நிலையில், தற்போது கடுமையான நிபந்தனைகளின் கீழ் உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இலங்கை அணியின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள் ஒக்டோபர் மாதம் 12ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் இடம்பெறத் திட்டமிடப்பட்டிருக்கும் நிலையில், இந்தத் தகுதிகாண் போட்டிகளுக்கு குறைந்தது 10 நாட்களுக்கு உள்ளேயேனும் இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் நிர்வாக சபைத் தேர்தல்களை நடத்தி முடிக்கவேண்டும் எனக் கூறப்பட்டிருக்கின்றது.



மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தின் 2023ஆம் ஆண்டுக்கான வலய மட்ட விளையாட்டுப் போட்டியின் சுவட்டு நிகழ்ச்சிகள் சேனையூர் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. இதில் 20 வயதின் கீழ் குண்டு போடுதல் நிகழ்ச்சியில் பங்குகொண்ட தோப்பூர் அல் - ஹம்றா மத்திய கல்லூரி மாணவர்களான எவ்.எம். அஸ்கி, ஆர்.எம். நிக்ஸான் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர். பயிற்றுவித்த விளையாட்டு ஆசிரியர் கே.எம்.றிபாஸையும் படத்தில் காணலாம். (படம் - சேருவில)

# கராத்தே போட்டியில் அண்ணனுக்கும் தங்கைக்கும் தங்கப் பதக்கம்





மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு மாகாண கராத்தே போட்டியில் கிளிநொச்சி மருதநகர் கிராமத்தைச் சேர்ந்த அண்ணனும் தங்கையும் தங்கப் பதக்கங்களை வென்றனர்.

கலையமுதன் சௌபர்ணிகா 11 வயதுக்குட்பட்டோருக்கான காட்டா போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். கலையமுதன் பரிதிகன் 21 வயதுக்குட்பட்டோருக்கான குமிதி போட்டியில் தங்கப்பதக்கத்தையும், காட்டா போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றார். இவர் லவன் மாஸ்டரின் மாணவனாவார். இவர் சென்ற வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9 பாடங்களிலும் ஏ சித்தியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7